

சென்னை மாகாணத்திற்கும் சமஸ்தானங்களுக்கும் ஸ்டாக்கிஸ்ட்டுகள் :

ஹிக்கின்பாதம்ஸ், சென்னையும், பிராஞ்சுகளும்


"லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகித்து
உங்கள் சருமத்தை மிருதுவாகவும் சுத்த
மாகவும் வைத்துக்கொள்ளுங்கள்"
என்று கூறுகிறார்
ரூபலேகா
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!
LTS. 155-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 37 — 1947 ஏப்ரல் 13 — விய... பங்குனி 31

தமிழ் நாட்டார் வெகு காலம் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கும்பகர்ணனோடு போட்டி போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கும்பகோணத்துக் கொசுக்களினாலும்கூட எழுப்ப முடியாமல் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தூக்கத்திலிருந்து அவர்களை எழுப்பவே முடியாதோ என்று பிறநாட்டார் எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் பாரதியார் தோன்றி, 'வெடிபடும் அண்டத்திடி பல தாளம் போட'த் தமிழ் நாட்டின் பெருமையை முழக்கினார். 'வெற்றி யெட்டுத் திக்கு மெட்ட' ஜயபேரிகை கொட்டினார். வீர சுதந்திரச் சங்கு ஊதினார். இவ்வளவுக்குப் பிறகு தமிழ் மக்கள் கண் விழித்து எழுந்து, நாலுபுறமும் பார்த்து, "இது என்ன கூப்பாடு? இது என்ன சத்தம்?" என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்களை நோக்கிப் பாரதியார்,

"கல்வி சிறந்த தமிழ் நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு"





என்று பறையறைந்து தெரியப்படுத்தினார். அதன்பேரில் தமிழர்கள் தெரிந்து கொண்டார்கள். தெரிந்து கொண்டு தமிழையும் கம்பரையும் போற்றத் தொடங்கினார்கள். கம்பர் விழாவும் கொண்டாட ஆரம்பித்தார்கள். முதன் முதலில் பொருநை நதிக் கரையில் திருநெல்வேலியில் கம்பர் விழா நடந்தது. பிறகு பல இடங்களிலும் நடந்து வருகிறது.

சென்ற வாரத்தில் கம்ப ராமாயணம் அரங்கேறிய பங்குனி உத்தரத் திருநாளை யொட்டிப் பல இடங்களிலும் கம்பர் விழா நடைபெற்றது. கம்பர் பிறந்து வளர்ந்த தேரழுந்தூரில் நடந்தது. கம்பரைத் தத்து எடுத்துக் கொண்ட செட்டிமார் நாட்டில், ஸ்ரீ சா. கணேசன் அவர்களுடைய பெருமித ஊக்கத்தைப்போல், விழாவும் பெருமிதமாக நடந்தது. கம்பர் சமாதி யடைந்த நாட்டரசன் கோட்டையில் ஸ்ரீ எ. கி. பரம் நாடாரின் தலைமையில் நடந்தது. கம்பர் யார், கம்பர் பாட்டு எது என்று தமிழர்களுக்கு உணர்த்திய ரஸிகமணி டி. கே. சிதம்பரநாதரின் தலைமையில் பம்பாய் — மதுங்காவில் மூன்று தினம் சிறப்பாக நடந்தது. பலாத்கார கோர தாண்டவம் நடைபெறும் கல்கத்தா நகரிலுள்ள தமிழர்களும் உற்சாகமாகக் கம்பர் விழாக் கொண்டாடினார்கள்.

சென்ற ஆண்டில் சென்னைக் கம்பர் கழகத்தார் விமரிசையாகக் கொண்டாடிய கம்பர் விழாவின்போது நடந்த யானை ஊர்வலக் காட்சியை நமது இந்த இதழ் அட்டை பெருமையுடன் தாங்கிக் கொண்டிருக்கிறது. யானை மீது அலங்கரித்த அம்பாரியில் வைத்திருந்த கம்ப ராமாயண ஓலைச் சுவடிகளை மேலே யுள்ள வட்டத்தில் காணலாம். இந்த ஆண்டிலும் சென்னையில் கம்பர் விழாவைச் சிறப்பாக நடத்தக் கம்பர் கழகக் காரியதரிசி ஸ்ரீ சோம சுந்தரம் பெருமுயற்சி செய்து வருவதாக அறிந்து மகிழ்ச்சி யடைகிறோம்.

உங்கள் பற்களுக்குப் பொருத்தமான ஆகிருதி!





டா. வெஸ்டின் விந்தை பிரஷ்

பற்களின் எல்லாப் புறங்களையும் 60% அதிக செம்மையாகத் துலக்குகிறது

- நீர் கடக்காது—நனைவு மேற்காது
- விஷக்கிருமிகள் அகற்றப்பட்ட கிலாஸ் ட்யூபில் பாக் செய்யப்பட்டது
- ஒரு வருட உத்தரவாதம்

மிருகங்களின் மயிரே கிடையாது

வியாபார விவசங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ
(இந்தியா) லிட்.
பம்பாய் - கல்கத்தா
கராச்சி - சென்னை

டாக்டர் வெஸ்ட்ஸ்

டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 37

என்ன சேதி?

மீண்டும் கிளர்ச்சி

நமது ஆந்திர சகோதரர்கள் (சகோதரர்கள் என்றால்கூட அவர்கள் சண்டைக்கு வருவார்களோ, என்னவோ?) இருக்கிறார்களே, இவர்கள் எப்போதுமே கொஞ்சம் விசித்திரமானவர்கள்தான். ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்தபோது ஆந்திர மாகாணப் பிரிவினைக்காக அவர்கள் தீவிரக் கிளர்ச்சி நடத்தினார்கள். பிரிவினைக்கு ராஜாஜிதான் குறுக்கே நிற்கிறார் என்று கதை கட்டி விட்டு இல்லாத அமர்க்களம் எல்லாம் செய்தார்கள். ஸ்ரீ பிரகாசம்காரு பிரதம மந்திரியான பிறகோ அவர்கள் ஆந்திர மாகாணப் பிரிவினையைப் பற்றி வாய் திறக்கவில்லை. கப்சிப் என்று இருந்தார்கள். ஸ்ரீ பிரகாசம்காரு பிரதம மந்திரி பதவியை விட்டுப் போன பிறகு, இப்போது மறுபடியும் ஆந்திர மாகாணப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். ரொம்பவும் பலமாகவே கிளப்பியிருக்கிறார்கள். எல்லோருக்கும் முன்னின்று மேற்படி கிளர்ச்சியை நடத்துபவர் ஸ்ரீ பிரகாசம்காரு அவர்கள்தான்.

சென்ற வாரம் சென்னையில் கூடிய ஆந்திர மகாசபையின் விசேஷக் கூட்டத்தின்போது மேற்படி கிளர்ச்சி உச்ச நிலைமையை அடைந்திருக்கிறது. தனி ஆந்திர மாகாணம் அமைப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஏற்பாடு செய்யாவிட்டால், மேற்படி அரசியல் நிர்ணய சபையிலும் சென்னைச் சட்ட சபையிலும் உள்ள ஆந்திர அங்கத்தினர்கள் எல்லோரும் ராஜினாமா செய்யவேண்டும் என்பதாக மேற்படி ஆந்திர மகா சபைக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மேற்படி தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் அத்துடன் நிற்கவில்லை; ஆந்திர மாகாணம் ஏற்படுத்துவதற்கு அரசியல் நிர்ணய சபை ஒத்தாசை செய்யா விட்டால், ஆந்திர தேசம் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தனியாக ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொள்ளும் என்ற ஷரத்தையும் சேர்த்திருந்தார். ஆனால், என்ன காரணத்தாலோ அந்தப் பகுதியை மாத்திரம் நீக்கி விட்டார்கள். அதையும் அசல் தீர்மானத்தோடு சேர்த்து நிறைவேற்றியிருந்தால், இன்னும் ரொம்ப பேஷாக இருந்திருக்கும்

ஆட்சேபமே இல்லை!

ஆந்திரர்கள் தனி மாகாணம் பெறுவதில் நமக்கு யாதொரு விதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் தனி மாகாணம் அடைவதற்குத் தமிழர்கள் குறுக்கே நிற்கவில்லை. அவர்களைக் காட்டிலும் ஒரு மடங்கு அதிகமாகவே நாம் அவர்களை விட்டுப் பிரிய ஆவலாயிருக்கிறோம். ஆட்சேபமும் தகராறும் இருப்பதெல்லாம் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையே யாகும். சென்னை நகரத்தை விட்டுவிட்டு, திருப்பதி மலைக்கு அப்பால் உள்ள பகுதியை தனி ஆந்திர மாகாணமாகச் செய்து கொள்வதிலே தமிழர்களுக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை.

சென்னை நகரம் தமிழர்களுக்கு உரியது. அதாவது தமிழ் நாட்டுடன் சேர வேண்டியது என்று நாம் சொல்லும்போது, சென்ற சட்ட சபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கும் விஷயத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள் கோட்டை விட்டு ஏமாந்து நின்ற விஷயம் எல்லோருக்கும் ஞாபகம் வரத்தான் செய்யும். இப்போதாவது அந்த உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் விஷயத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள் உறுதியாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இவ்வருஷப் பந்தயம்



1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் சுதந்திர இலட்சியத்தை அடைவதற்கு இந்தியா காலதேவதையுடன் போட்டியிடுகிறது.
உலகம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.


ஐக்ய சுதந்திர இந்தியா
(அரசியல் நிர்ணய
சபை மார்க்கம்)
அராஜகம்
குழப்பம்
பயங்கரம்
அந்த வழி போகாதீர்கள்!
அங்கே ஆபத்துக்கள்
காத்திருக்கின்றன! இந்தப்
பத்திரமான வழிக்கு வாருங்கள்!
SHASTRY

சதுரங்க விணை

பிரஜைகளுக்கோ, பிறருக்கோ தீங்கு நேரக் கூடாது. காலதேச வர்த்தமானங்களை அனுசரித்துத் தந்திர முறைகளைக் கைக் கொண்டாலும், பொதுவாக ராஜ்ய நிர்வாகம் நீதி நெறியுடன் நடைபெற வேண்டும்.

இதுதான் முன் காலத்தில் ராஜ தந்திரம் என வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், இன்றைய ராஜதந்திரமோ முற்றிலும் வேறுவிதமாக இருக்கிறது.

நீதி நெறிக்கு நேர் முரணான சொல்லொன்று, செயலொன்று என்ற பாழும் தந்திரமே இன்று ராஜதந்திரமாகத் திகழ்ந்து வருகிறது.

அதாவது, பச்சையாகக் கூறப் போனால் இன்றைய ராஜ தந்திரம் கலப்பற்ற ஆஷாடபூதித் தனமே!

* * *

இன்று இந்தியாவின் விரோதிகள் யார்?

ஒருவருமே இல்லை!

ஆம், ஒருவர்கூட இல்லைதான்!

இந்தியாவில் இரத்தக்களரி ஓய்ந்து நிலையான சுதந்திர சர்க்கார் ஏற்பட வேண்டுமாயின், வைஸராய் லார்டு மவுண்ட் பாட்டன் தங்களைக் கலந்து பேச வேண்டியது அத்தியாவசியமென்று ஹிந்து மகா சபைத் தலைவர்கள் வைஸராய்க்கு யோசனை கூறியிருக்கிறார்கள்!

இந்தியாவைப் பாக்கிஸ்தான் செய்து விட்டால், அகில ஹிந்துஸ்தானத்திலுள்ளவர்களும் ஆனந்தமாக வாழலாமென்றும், பாக்கிஸ்தானத்தில் பாலுந் தேனும் வழிந்தோடும் என்றும், பின்னர் எல்லோரும் இன்புற்றிருக்கலாம் என்றும் ஜின்னா சாயபு சளியாது கூறி வருகிறார்!

சர்ச்சில் கோஷ்டியினர் கூட, சுதந்திர இந்தியாவில் சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் விழுங்கி விடுவார்களே என்றுதான் பயப்படுகிறார்கள்! சிறுபான்மையோருக்கும், குறிப்பாக தாழ்த்தப் பட்டோருக்கும் கஷ்டம் நேராது என்று நிச்சயமாகத் தெரிந்தால், இந்தியா பூரண சுதந்திரம் பெற்று விளங்குவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்ற தோரணையில்தான் சர்ச்சில் கோஷ்டியினர் பேசுகின்றனர்!

சமீபத்தில் நடந்த இந்திய மன்னர்களின் மகாநாட்டிலும், அரசியல் நிர்ணய சபைக்கு மறைமுகமாக முட்டுக்கட்டை போடவேண்டுமென்ற அதே மூச்சில், இந்தியாவின் சுதந்திரத்தைத் நாங்கள் பூரணமாக ஆதரிப்பதாயும் ஒரு போடு போட்டிருக்கிறார்கள்!

* * *

சர்வதேச அரங்கத்திலும் இதே தந்திரம்தான் தாண்டவம் ஆடுகின்றது.

தன் இஷ்டப்படி தனது அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமையுண்டு என்று அட்லாண்டிக் பிரகடனம் கூறுகிறது.

ஆனால், அட்லாண்டிக் பிரகடனத்தின் கர்த்தாக்களே, வெகு தொலைவிலுள்ள தேசங்களின் சர்க்கார்களும் தங்கள் இஷ்டப்படி ஆட வேண்டுமென்பதற்காக ஸாம, தான, பேத உபாயங்களை வெகு மும்முரமாகக் கையாண்டு வருகிறார்கள்.

இன்று உலக மகாஜனங்கள் குடியரசு முறையையே அதிகமாக விரும்புகிறார்கள். ஆனால், எத்தகைய குடியரசு என்பதிலே அபிப்பிராய பேதம் உண்டாகும்.

உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா குடியரசுதான்; ருஷ்யா குடியரசுதான்; ஸ்விட்ஸர்லாந்தும் குடியரசுதான்.

அவைகளின் போர்வை குடியரசுதான் என்றாலும், அவை ஒன்றுக்கொன்று நேர்மாறான அரசியல் நிர்வாக முறைகளை உடையனவாக இருக்கின்றன.

ருஷ்யாவைக் கண்டு அமெரிக்கா அஞ்சுகிறது; அமெரிக்காமீது ருஷ்யா சந்தேகம் கொள்ளுகிறது; அவ்விரு

குடியரசுகளும் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று ஸ்விட்ஸர்லாந்து கருதுகிறது.

இப்படியே சந்தேகம் வளர்ந்து, ஒன்றையொன்று ஏமாற்றி வெற்றி பெறுவதற்காக அவைகள் அரசியல் சதுரங்கங்களில் ஈடு படுகின்றன. அவைகளின் விபரீத வேலைகள் இறுதியில் யுத்த அரங்கத்தில் வந்து முடிவடைகின்றன.

வல்லரசுகள் தங்கள் சம்பந்தப்பட்ட வரையில் குடியரசாகவும் ஜனநாயகமாகவும் திகழ்ந்து வந்தாலும், மற்ற நாடுகள் விஷயத்தில் அவை கொடிய சர்வாதிகார ஆட்சி முறையை அனுஷ்டிக்கத் தயங்குவதில்லை.

இவ் விஷயமாக எகிப்து செனெட் சபைத் தலைவரான ஹெய்கல் பாஷா கூறுவதைப் பாருங்கள்:

“உலகில் மத்தியதர நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் சட்டாம் பிள்ளையாக இருந்து கொண்டு எவ் விஷயத்தையும் குட்டிச் சுவராக்குவது வல்லரசுகள்தான். மற்ற நாடுகள் சம்பந்தமான பிரச்னைகளையும் தங்கள் இஷ்டப்படி வல்லரசுகள் முடிவு செய்வது ஜனநாயகமா? இல்லை, அது சர்வதேச சர்வாதிகாரமாகும். நேச நாடுகளாயினும், பகை நாடுகளாயினும், வல்லரசுகள் அவைகளின் விதியை நிர்ணயிக்க ஆரம்பிக்கும் போதெல்லாம் உலகம் முழுதும் குழப்பமும், அவநம்பிக்கையும் அதிகமாகின்றனவேயன்றி உருப்பட்ட காரியம் எதுவும் நடப்பதில்லை. மற்றும் அந்த வல்லரசுகளின் போக்கு மானிட நீதியை அல்ல, மிருக பலத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.”

இவ்வாறாக பிரபல எகிப்து தலைவர் வல்லரசுகளை வெளுத்து வாங்கியிருக்கிறார். வல்லரசுகளின் மகாநாடுகளையும், அவைகளின் மாசு படிந்த முறைகளையும் அவரைக் காட்டிலும் தத்ரூபமாகவும் தெளிவாகவும் வேறெவரும் சித்திரிக்க முடியாது.

* * *

1914-18 யுத்தத்துக்குப் பின், மறுபடியும் உலகத்தில் கோர யுத்தம் நிகழாதிருக்க வேண்டுமாயின், ஆயுதப் பரிகரண முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்று, அதாவது ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் யுத்த தளவாடங்களை வைத்துக் கொள்ளக் கூடாதென்று வல்லரசுகள் கருதின.

அதற்குரிய பிரமாத திட்டமும் தயாராயிற்று. குறிப்பாக, தர்ம யுத்தத்துக்கு வழியேயின்றி நிரபராதிகளைப் பலி கொள்ளும் கொடிய யுத்த தளவாடங்களை அறவே ஒழித்து விட வேண்டும் என்றும் சர்வதேச சங்கத்தில் தீர்மானம் வந்தது.

இந்திரஜித்தைப் போல் கண்ணுக்குத் தெரியாமல் இருந்து கொண்டு மாய யுத்தம் செய்து ஆயிரக் கணக்கானவர்களைப் பாதாள உலகுக்கு அனுப்பும் நீர்மூழ்கிகளை ஒழித்துவிட வேண்டும் என்பதும் அப்போது சர்வதேச சங்கத்தில் கூறப்பட்ட யோசனைகளில் ஒன்றாகும். ஆனால், அந்த யோசனையை அப்போது பிரிட்டன்தான் மிகக் கடுமையாக எதிர்த்தது. அவ்வாறு எதிர்த்த பாவந்தானோ என்னவோ, சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிகளால் பிரிட்டன் கோடிக் கணக்கான டன்கள் எடையுள்ள கப்பல்களை இழக்க நேர்ந்தது!

அவ்வாறாக, சர்வதேச சங்கத்தில் பிரிட்டன் செய்த சதுரங்க வேலைகள் பின்னர் அதற்கே வினையாக முடிந்தன.

பிறகு யுத்த தளவாடங்களை ஒவ்வொரு வல்லரசும் பைசாச வேகத்தில் அதிகரிக்க ஆரம்பித்தது.

அந்த வேகத்தின் விளைவு உலகம் அறிந்த விஷயமே.

யுத்தத்தைத் தடுக்க ஆயுதப் பரிகரணமே உற்ற வழி என்று முன்பு கூறிய வல்லரசுகளின் தத்துவம் இப்போது தலைகீழாகி யிருக்கிறது. அதாவது, எந்த க்ஷணத்திலும் போருக்குத் தயாராக இருப்பதே போரைத் தடுப்பதற்குரிய வழி என்ற முடிவுக்குச் சில வல்லரசுகள் வந்திருக்கின்றன. என்றாலும், ஆயுதப் பரிகரணப் பகட்டுப் பேச்சுக்கு மாத்திரம் எவ்விதக் குறைவும் இல்லை!

அமெரிக்கா இராணுவச் செலவை அபரிமிதமாக அதிகரித்து வருவதுடன், தான் ஆட்டி வைக்கக் கூடிய பிற நாடுகளும் யுத்த சன்னத்தமாக இருப்பதற்கு உதவி புரிந்து வருகிறது.

பிரிட்டனோ, சம்பிரதாயத்துக்கே முற்றிலும் விரோதமாக, சமாதான காலத்தில்கூட கட்டாய இராணுவ சேவையை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்து விட்டது.

அவ்வாறு செய்வதில் தொழிற் கட்சி சர்க்காருக்கு அவ்வளவாகச் சம்மதம்

இல்லையென்றாலும், அவர்கள் இராணுவத் தலைவர்களின் வற்புறுத்தலுக்கு இசைய வேண்டி வந்ததென்றும் கூறப்படுகிறது.

பிறப்பு என்றிருந்தால் இறப்பு என்பது எவ்வளவு நிச்சயமோ அது போலவே, யுத்த தளவாடங்களைக் குவிப்பதென்றிருந்தால், யுத்த அரங்கத்தில் குதிப்பதென்பதும் நிச்சயந்தான்.

* * *

வல்லரசுகளின் ஆஷாடபூதித்தனத்தை அம்பலப்படுத்தும் மற்றோர் இரகசியமும் இப்போது வெளியாகியிருக்கிறது.

அதாவது, தென் ஆப்பிரிக்காவின் நிறத் திமிரைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் மகாசபையில் இந்தியாவுக்கு விரோதமாக அமெரிக்காவும் பிரிட்டனும் வோட் செய்தது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

கலப்பற்ற அநீதியான நிறத் திமிரை பிரிட்டிஷ், அமெரிக்க அரசாங்கங்கள் பகிரங்கமாக ஆதரிக்கவில்லை. அப்படியிருந்தும் அவ்விரு தேசப் பிரதிநிதிகளும் மேற்படி சபையில் இந்தியாவுக்கு விரோதமாக வோட் கொடுத்ததற்குக் காரணம் பச்சை சுயநலம் என்பது இப்போது தெரிகிறது.

அதாவது, சென்ற சில மாதங்களில் பிரிட்டனும் அமெரிக்காவும் தென் ஆப்பிரிக்காவில் கோடிக் கணக்கான பவுன் மூலதனம் போட்டுப் பிரம்மாண்டமான தொழிற் சாலைகளை ஆரம்பித்திருக்கின்றனவாம். எதிர் காலத்தில் ருஷியாவுடன் மோதிக் கொள்ளும்படி நேர்ந்தால், தென் ஆப்பிரிக்கா தங்களுடைய யுத்த தளவாட உற்பத்திக் களஞ்சியமாக விளங்க வேண்டும் என்பதே அவ்விரு வல்லரசுகளின் நோக்கமென்றும், பிரிட்டனும் அமெரிக்காவும் ஜெனரல் ஸ்மட்ஸின் அநீதியை ஆதரித்ததற்கு அதுதான் இரகசியமான காரணமென்றும் ஆதாரபூர்வமான செய்திகள் கூறுகின்றன.

* * *

இவ்விதம் பரஸ்பரம் சந்தேகமும், சஞ்சல புத்தியும், சத்துரு பாவமும் கொண்ட வல்லரசுகளின் சதுரங்க மகாநாடு இப்போது மீண்டும் மாஸ்கோவில் நடைபெற்று வருகிறது.

மகாநாடு ஆரம்பமாகி ஒரு மாதம் ஓடி விட்டது. ஆனால், இன்னும்கூட அம் மகாநாடு முட்டுக்கட்டைப் படலத்தைத் தாண்டிச் செல்லவில்லை!

இதற்கு முன் பாரிஸ், நியூயார்க், லண்டன் முதலிய நகரங்களில் நடந்த வல்லரசு மகாநாடுகளின் கதியைக் கவனித்தவர்கள், மாஸ்கோ மகாநாட்டில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டையைக் குறித்து ஆச்சரியப்பட மாட்டார்கள்.

போதாக் குறைக்கு, அம் மகாநாடு ஆரம்பமாகும் தருவாயில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் போட்ட வெடி குண்டு, ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற கதையாகி, மாஸ்கோ மகாநாட்டின் சிக்கல்களை அதிகப்படுத்தியிருக்கிறது.

ஒரு சில வல்லரசுகளின் சதுரங்க வினை அவைகளை மாத்திரம் சுடுவதாயின், மகாநாட்டின் ஆரம்பத்தைக் குறித்தோ அல்லது முடிவைக் குறித்தோ யாரும் வருந்த மாட்டார்கள். ஆனால், அவைகளின் சதுரங்கம் உலகம் முழுவதையும் யுத்த அரங்கத்தில் இழுப்பதால்தான், உலக நாடுகள் எல்லாம் அச் சதுரங்கம் எந்தெந்த நாடுகளுக்கு வினையாக முடியுமோ என்று கதி கலங்குகின்றன.

தலைவலி நீங்கிற்று!

"சபரி"

அன்றொரு நாள் நான் ரொம்ப அவசரமாக மயிலாப்பூருக்குப் போக வேண்டியதாக இருந்தது.

அன்று எனக்குக் கடுமையான தலைவலி. சாதாரணமாக எனக்குத் தலைவலி வருவதே யில்லை. பஸ்ஸிலோ டிராமிலோ எங்காவது போக வேண்டுமென்று நினைத்தால் போதும், உடனே திடீரென்று தலைவலி வந்து விடும். அந்த நினைவுதான் அன்றைக்கும் தலைவலியை உண்டாக்கிற்று.

* * *

நல்ல வேளை, அன்று நான் ரொம்ப நேரம் காத்துக் கொண்டிருக்கவில்லை.

பளபளவென்று கண்ணைப் பறிக்கும் புது வர்ணத்துடன் ஒரு பஸ் கம்பீரமாக வந்து என் முன் நின்றது.

பஸ்ஸில் ஏறினேன். ஏறி, இரண்டடி உள்ளே எடுத்து வைத்தேன். அப்படியே திக்பிரமையுற்றவன் போல நின்றேன். ஏனெனில், அது பஸ் போலவே எனக்குத் தோன்றவில்லை. கீழே கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஸீட்டிலும் சுகமான புதிய ஸ்பிரிங் மெத்தைகள் போடப்பட்டிருந்தன. ஏறுவதற்கு ஒரு புறமும் இறங்குவதற்கு மற்றொரு புறமும் இரு வழிகள் இருந்தன. வண்டிக்குள் எங்கும் சுத்தமாகவும் லட்சணமாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. பொதுவாகச் சொல்லப் போனால், அது போக்குவரத்து பஸ்ஸாகவே தோன்றவில்லை.

இதற்குள், "அவ்வளவுதான் ஸார், இனி இடம் இல்லை" என்று கண்டக்டர் சொல்வது என் காதில் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். என்ன இது! இப்படியுமா ஒரு காலம் வந்திருக்கிறது! எத்தனை பேரை வேண்டுமானாலும் நிற்க வைப்பதற்கு இடம் இருக்கிறதே! அப்படியிருக்கும் போது 'இடம் இல்லை' என்று கண்டக்டர் எதற்காகச் சொல்ல வேண்டும்!

பஸ் புறப்பட்டது. எல்லா பஸ்களும் போவது போல, ஹைகோர்ட் — சென்ட்ரல் ஸ்டேஷன் வழியாகத்தானே இதுவும் போக வேண்டும்? — இல்லவே இல்லை! வண்டி பீச் வழியாகக் கோட்டையைக் கடந்து மெரீனா சாலை வழியே சென்றது. எனக்கு உண்டான அதிசயம் கொஞ்ச நஞ்சம் அல்ல. அமெரிக்கா முதலிய மேல் நாடுகளிலே பெருங் கொள்ளைக்காரர்கள் ஜனங்களை மோட்டாரில் ஏற்றிக் கொண்டு போய், ஜனசஞ்சார மில்லாத இடங்களில் வைத்து அவர்களுடைய பொருள்களை யெல்லாம் கொள்ளையடிப்பது வழக்கமாம். இப்போது அந்த ஞாபகம் வரவே, நான் என் பையைத் தடவிப் பார்த்தேன். 0–4–9 இருந்தது. அதை எடுத்துப் பத்திரமாகக் கையில் மறைத்து வைத்துக் கொண்டே, கண்டக்டரைப் பார்த்து, "எங்களை யெல்லாம் எங்கே அப்பா அழைத்துக் கொண்டு போகிறாய்?" என்று கேட்டேன். அவன் சிரித்துக் கொண்டே, "மயிலாப்பூருக்கு, ஸார் !—மயிலாப்பூருக்கு !" என்றான்.

"அப்படியானால் இந்த வழியாகப் போகிறாயே!" என்று கேட்டேன்.

"ஆம், இந்த வழியாகத்தான் போக வேண்டும். தெரியாதா, இது ஸ்டேட் பஸ் நெ. 21 A ஸார்!" என்றான் கண்டக்டர்.


கண்டக்டர் இதைச் சொன்னதும்தான் எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. சென்ற மாதம் 24-ம் தேதி சர்க்கார் பஸ் போக்குவரத்து விழாவை மாஜி மந்திரி ராகவ மேனனும் தற்போதைய மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் ஆரம்பித்து வைத்துப் பேசியதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி படித்திருந்தேன்.

* * *

ஆகவே, காங்கிரஸ் சர்க்கார் சொந்தத்தில் பஸ் விடவே ஆரம்பித்து விட்டார்கள்! பொதுஜன வசதிக்குரிய பெரிய தொழில்களை தேசிய மயமாக்கும் வேலையைத் தொடங்கியே விட்டார்கள்!

ரொம்பவும் சந்தோஷமான விஷயம்.

சில மாதங்களுக்கு முன்பு பிரகாசம் சர்க்கார், தாங்கள் பஸ் ஸர்விஸ் நடத்தப் போவதாகச் சொன்னபோது, பொது ஜனங்கள் அதைப் பற்றிச் சிரத்தை கொள்ளாததில் அதிசயம் எதுவும் இல்லை. வானத்தை வில்லாக வளைப்பதாகவும் மணலைக் கயிறாகத் திரிப்பதாகவும் கடிதாசியிலே சொல்லலாம். ஆனால் ஒரு திட்டம்



உண்மையாகவே வெற்றி பெறுவது, அதை ஏற்று நடத்தும் மனிதர்களின் திறமையைப் பொறுத்தே இருக்கிறது. ஊழலுக்குப் பெயர் போன பிரகாசம் சர்க்கார் பஸ் ஸர்விஸ் நடத்தினால் அது எங்கே உருப்படப் போகிறது என்று பலர் எண்ணினார்கள். முக்கியமாக, தென் ஜில்லாக்களில் பஸ் பிரயாணம் செய்து பழக்கப்பட்டவர்களுக்கு மேற்படி அவநம்பிக்கை அதிகம் இருந்தது. "சர்க்காராவது, பஸ் நடத்தவாவது? டி. வி. எஸ். பஸ் ஸர்விஸைப் போல் இவர்களால் நடத்த முடியுமா?" என்று கேட்டார்கள்.

டி. வி. எஸ். பஸ் ஸர்விஸைப் பற்றி மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். "ரயில்கள் குறிப்பிட்ட நேரம் தவறினாலும் தவறும்; டி. வி. எஸ். பஸ் தவறாது!" என்ற புகழ் மேற்படி ஜில்லாக்களில் ஏற்பட்டிருக்கிறது. பஸ்களில் பிரயாணிகளின் வசதிகள் ரொம்பவும் கவனிக்கப்படுகின்றன. எனவே, பொதுவாக தென் ஜில்லாக்காரர்கள், சர்க்கார் பஸ் விடுவது பற்றி அவ்வளவு உற்சாகப்படவில்லை.

பஸ் போக்குவரவு முதலிய பெரிய தொழில்களைப் பொதுஜன சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த வேண்டுமென்பது பல அறிஞர்களின் அபிப்பிராயம். அந்தத் தொழிலில் வரும் கோடிக்கணக்கான வருமானம் தனிப்பட்டவர்களுக்குப் போகாமல் பொதுஜன சர்க்காருக்குப் போவதுதான் நியாயம். ஆனால், பிரகாசம் சர்க்கார் பஸ் போக்குவரவு நடத்தப் போக, அதனால் "தனிப்பட்டவர்கள் பஸ் விடுவதே தேவலை!" என்ற கொள்கைக்குப் பலம் ஏற்படப் போகிறதே என்ற கவலை பலருக்கும் இருந்தது.

அப்படிக் கவலைப்பட்டவர்களில் நானும் ஒருவன்தான். ஆனால், நல்ல வேளையாக சர்க்கார் பஸ் ஓட ஆரம்பித்ததும், ஓமந்தூர் மந்திரி சபை வந்ததும் ஒத்துக் கொண்டது. திறமைக்குப் பெயர்போன டாக்டர் ராஜன் நிர்வாகத்தின் கீழ் சர்க்கார் பஸ்கள் நன்றாக ஓடும் டி. வி. எஸ். பஸ்களைக் காட்டிலும் நல்ல பெயர் வாங்கினாலும் அதில் ஆச்சரியம் இராது.

* * *

வண்டி பீச் வழியே, அந்த மென்மையான தூய ரஸ்தாவின் வழியே, ஆடாமல் குலுங்காமல் பஞ்சு போல விரைந்து சென்றது. கடற் காற்று அலை அலையாகப் பாய்ந்து வந்து, வீடு நோக்கிச் செல்லும் பிரயாணிகளின் களைப்பையும் அயர்வையும் போக்கிற்று. மெரீனா வழியேயுள்ள பசுங் கொடிகளும் செடிகளும் விதவிதமான பிரம்மாண்டமான கட்டடங்களும் வெண் மணலும், தூரத்திலே நீலத் திரைக் கடலும் மாலை வெய்யிலின் ஒளியிலே செம்பொன் வண்ணம் பெற்றுத் திகழ்ந்த வானமும் எல்லோரையும் ஒரு சொல்ல முடியாத மயக்கத்தில் ஆழ்த்தின.

கடைசியில் வண்டி திரும்பி மயிலாப்பூருக்குள் நுழைந்தது. நானும் இறங்கினேன். என்னுடைய தலைவலி போன இடமே தெரியவில்லை!

மூன்று முன்னுரைகள்

தமிழ் இலக்கிய உலகில், "தமிழ் வசனம் என்றால், தலைவலிதான்!" என்று சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், அதாவது 1930–ம் வருஷத்தில், "ஏட்டிக்குப் போட்டி" என்ற நூல் வெளியாயிற்று. அந்த நூலின் இரண்டாவது பதிப்பைப் பதினேழு வருஷத்துக்குப் பிறகு, நாளது 1947-ம் வருஷத்தில் தமிழ்ப்பண்ணைக் காரர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மேற்படி இரண்டாம் பதிப்புக்கு ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அளித்திருக்கும் முன்னுரையில் ஒரு பகுதி பின் வருமாறு :—

"முதல் கட்டுரையை வாசிக்க ஆரம்பித்தேன். வாசிக்க வாசிக்க அதிசயந்தான் அதிகரித்தது. பாராவுக்கு மேல் பாரா கும்மாளி போட்டுக்கொண்டு ஓடிற்று. 'அடாடா! தமிழ் பாஷை இத்தனை விளையாட்டையும் பலத்தையும் எங்கேதான் ஒளித்து வைத்திருந்தது!' என்று வியக்க வேண்டி வந்தது. அந்த வேளையில் ஆனந்தத்துக்கு இடமில்லை; அதிசயமானது ஆனந்தத்தை முழங்கையால் இடித்துத் தள்ளி விட்டது.

முதல் கட்டுரையை மூன்று தடவை வாசித்து அனுபவித்த பிறகுதான் அடுத்துள்ள கட்டுரைகளுக்குப் போக முடிந்தது.

கையாண்டுள்ள விஷயங்கள் எத்தனையோ ரகங்களைச் சேர்ந்தவை. சகுனம், நாள், நக்ஷத்திரம் பார்க்கிற காரியம் நம்மை என்ன கேலிக் கெல்லாமோ உள்ளாக்குவதுண்டு. அந்தச் சமயங்களில் நமக்கு எரிச்சல் வரும்; கோபம் வரும். வேண்டாத காரியங்களை அந்தக் கோபத்தினால் செய்துவிடுவோம். பிறகு மனம் வருந்தவும் செய்வோம். ஆனால், 'ஏட்டிக்குப் போட்டி' என்னும் முதலாவது கட்டுரையை வாசித்து விட்டால் சகுனம், நாள், நக்ஷத்திரம் பார்ப்பதைப் பற்றிக் கோபம் ஒன்றும் வராது; சிரிப்புத்தான் பொங்கிக் கொண்டு வரும்.

தமது கட்டுரையால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று சொல்லிக் கட்டுரையை முடிக்கிறார் ஆசிரியர். ஆனால் கோபம் வராமல் சிரிக்கப் பண்ணி விடுவதைக் காட்டிலுமா இருக்கிறது வேறு பிரயோஜனம்?......"

ஏட்டிக்குப் போட்டி இரண்டாம் பதிப்புக்கு ஆசிரியர் கல்கி எழுதியுள்ள முகவுரை பின்வருமாறு தொடங்குகிறது :—

"ஒரு காலத்தில் நான் நல்ல எழுத்தாளனாக இருந்தேன்! (அதாவது சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு.) அந்தக் காலத்தில் என் கையெழுத்து முத்து முத்தாகவும் மணி மணியாகவும் இருக்கும். கண்ணிலே ஒத்திக்கொள்ளும்படி இருக்கும். கண்ணிலே ஒத்திக் கொண்டால், கண்ணுக்காவது எழுத்துக்காவது ஒரு கெடுதலும் சேராதென்று உறுதியாகச் சொல்லலாம்!

உண்மையில், நமது தமிழ்நாட்டுத் தலைவர் ராஜாஜி அவர்கள் முதன் முதலில் என்னிடம் அபிமானம் கொண்டது என்னுடைய கையெழுத்துக்காகத்தான். புகழ் பெற்ற 1923-ம் வருஷத்தில் நான் எழுதிய ஒரு அரசியல் துண்டுப் பிரசுரத்தை ராஜாஜி பார்த்து விட்டு, 'இவருடைய கையெழுத்து வெகு நன்றாயிருக்கிறது!' என்று சொன்னார். ராஜாஜியின் அந்தப் பாராட்டுதலை நான் சென்ற இருபத்து நான்கு வருஷ காலமாக மறவாமல் பாராட்டிப் போற்றி வந்திருக்கிறேன். ஏனெனில் அதற்குப் பிறகு எத்தனையோ தடவை ராஜாஜி என்னுடைய கையெழுத்தைப் பார்க்கும்படி நேர்ந்திருந்தும் ஒரு தடவையாவது 'நன்றாயிருக்கிறது!' என்ற பாராட்டு இருக்க வேண்டுமே! கிடையவே கிடையாது!

அப்படி நான் நல்ல எழுத்தாளனாக இருந்த காலத்தில் என்னுடைய எழுத்து எல்லோருக்கும் புரியும்படியாகவும் இருந்தது. தனித் தனியாகவும் கோணல் மாணல் இல்லாமலும் முத்துக் கோத்தது மாதிரி இருந்தது. அப்புறம் நான் பத்திரிகைகளுக்குக் கட்டுரையும் கதையும் எழுத ஆரம்பித்தேன்....சின்னஞ் சிறிய 'தமிழ்த் தேனீ' குறிப்புகள், நெடிய பெரிய 'அகஸ்தியர்' சிறு கதைகள், பொருள் பொதிந்த ஆழமான கட்டுரைகள், ஹாஸ்ய ரஸம் ததும்பிய வாட்ட சாட்டமான கட்டுரைகள், சோக ரஸத்தினால் இளைத்து மெலிந்த கட்டுரைகள் இப்படியாக என் அழகான கையெழுத்தை நாசமாக்குவதற்கு என்னென்ன வழிகள் உண்டோ, அவ்வள

யையும் கையாண்டேன்! கடைசியாகத் தொடர் கதைகளும் எழுத ஆரம்பித்தேன்! அவ்வளவுதான்! என் அழகான கையெழுத்து அடியோடு சர்வ நாசத்தை அடைந்தது! வந்தேமாதரம்! ஜே ஹிந்த்!......"

* * *

இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ள தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை இந்த நூலுக்கு மூன்றாவது முன்னுரை எழுதியிருக்கிறார். அதை அவர் தொடங்கியிருக்கும் விதத்தைக் கேளுங்கள் :—

" கல்கி அவர்கள் சிறு பையனாக இருந்த போது, அவர் பிறந்த தேசமானது அவருடைய சேவையே இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயமே அவருக்குத் தெரியாமல் இருந்ததாம்.

அந்தக் காலத்தில் ஒருநாள் தேசம் அவருடைய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருந்த பாழும் கிணற்றில் விழுந்து விட்டதாம்! முழுகுவதற்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் தேசம் தத்தளித்துக் கொண்டிருந்தபோது பக்கத்திலிருந்த தேசபக்தர்கள் கல்கியைப் பார்த்து, 'அப்பா! தேசத்தைக் காப்பாற்ற ஒரு துரும்பையாவது நீ எடுத்துப் போடக் கூடாதா?' என்று சொன்னார்களாம்.

'துரும்பு என்னத்திற்கு? கல்லைத் தூக்கியே போடுகிறேன்!' என்று சொல்லி விட்டு ஒரு கல்லைத் தூக்கிக் கல்கி போட்டாராம். உடனே, தேசம் அந்த நாலு விரற்கடைத் தண்ணீரில் தலைகீழாக அமிழ்ந்து பிராணனை விட்டுவிட்டதாம்!

இதன் பலனாகக் கல்கியின் தகப்பனார் ஒரு வராகன் தண்டம் கொடுக்கும்படி ஆயிற்றாம். தகப்பனாரிடம் மூன்றரை ரூபாய் வாங்கிக் கொண்டு போய், புதிய இந்தியா தேசப் படம் ஒன்று வாங்கி வந்து பள்ளிக்கூடத்துச் சுவரில் மாட்டிய பிறகு தான் உபாத்தியாயர் அவரைப் பெஞ்சி மேலே யிருந்து இறக்கினாராம் ......"

* * *

மேற்படி முன்னுரைப் பகுதிகள் நேயர்களுக்குப் பிடித்திருந்தால் "ஏட்டிக்குப் போட்டி" நூலில் உள்ள இருபது கட்டுரைகளும் கதைகளும் கட்டாயம் பிடித்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



சோலைமலை இளவரசி

கல்கி

-சந்திரா-

19. விடுதலை வந்தது!

சென்ற அத்தியாயத்தில் கூறிய படி சோலைமலை மணியக்காரர் சிறைச் சாலைக்கு வந்து குமாரலிங்கத்தைப் பார்த்து ஏறக்குறைய ஒரு வருஷத்துக்கு மேலாகி விட்டது.

இதற்கிடையில் கீழேயுள்ள மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, அதற்கு மேலே ஸெஷன்ஸ் கோர்ட்டு, அதற்கு மேலே ஹைகோர்ட்டு வரையில் வழக்கு நடந்து முடிந்தது.

கடைசியாக, தளவாய்ப் பட்டணம் கலக வழக்கில் சம்பந்தப் பட்டவர்களில் நாலு பேருக்குத் தூக்குத் தண்டனை என்றும், பதினாறு பேருக்கு ஆயுள் தண்டனை என்றும் தீர்ப்பாயிற்று.

தூக்குத் தண்டனை அடைந்தவர்களில் குமாரலிங்கமும் ஒருவன் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா? அதைப் பற்றி அவன் வியப்படையவும் இல்லை; வருத்தப்படவும் இல்லை. மரண தண்டனை அவன் எதிர்பார்த்த காரியந்தான். மேலும், ஆயுள் முழுதும் சிறையில் இருப்பது என்பதை நினைத்தபோது அதைவிடத் தூக்குத் தண்டனை எவ்வளவோ மேல் என்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால் தூக்குத் தண்டனை அடைந்த மற்றவர்கள் யாரும் அவ்விதம் அபிப்பிராயப் படவில்லை. அவர்களுடைய உற்றார் உறவினரும் சிநேகிதர்களும் பொது மக்களுங்கூட அவ்வாறு கருதவில்லை. உயிர் இருந்தால் எப்படியும் ஒருநாள் விடுதலை பெறலாம். ஆயுள் முழுதும் சிறையில் இருக்க வேண்டி வரும் என்பதுதான் என்ன நிச்சயம்? இந்தியா அத்தனை காலமும் விடுதலை பெறாமலா இருக்கும்? இரண்டு மூன்று வருஷத்துக்குள்ளேயே ஏதாவது ஒரு சமரசம் ஏற்படலாமல்லவா? இந்தியா சுயராஜ்ய மடையலாமல்லவா?

எனவே, தூக்குத் தண்டனை அடைந்தவர்களின் சார்பாகப் பிரிவு கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது. குமாரலிங்கத்துக்கு இது கட்டோடே பிடிக்கவில்லை. அதனால் ஒரு பயனும் விளையப் போவதில்லை என்று அவன் நம்பினான். மற்றவர்களுடைய கதி எப்படியானாலும் தன்னுடைய தூக்குத் தண்டனை உறுதியாகத்தான் போகிறது என்று அவன் நிச்சயம் கொண்டிருந்தான். ஆயினும் மற்றவர்களின் வற்புறுத்தலுக்காகப் பிரிவி கவுன்ஸில் அப்பீலுக்கு அவன் சம்மதம் கொடுத்தான்.

சம்மதம் கொடுத்து விட்டு, சிறையிலிருந்து தப்பி ஓடுவதற்கு என்ன வழி என்பதைப் பற்றிச் சிந்திக்கலானான்.

அதுவும், உண்மையில் உயிர் தப்பிப் பிழைப்பதற்காக அல்ல; தூக்குத் தண்டனையிலிருந்து தப்பித் துப்பாக்கிக் குண்டினால் மரண மடையும் உத்தேசத்துடனே தான். அதுவே தன்னுடைய தலைவிதி என்றும் அந்த விதியை மாற்ற ஒருநாளும் ஒருவராலும் முடியாது என்றும் அவன் நம்பினான். எனவே, தப்பி ஓடும் முயற்சிக்குத் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பகலிலும் இரவிலும் கனவிலும் நனவிலும் அந்த எண்ணமே அவனை முழுக்க முழுக்க ஆட்கொண்டிருந்தது. சிறையிலிருந்து தான் தப்பி ஓடுவதுபோலும் தன் முதுகில் குண்டு பாய்ந்து மார்பின் வழியாக இரத்தம் குபுகுபு வென்று பாய்வது போலும் பல தடவை அவன் கனவு கண்டு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

ஆனபோதிலும் சிறையிலிருந்து தப்பிச் செல்வது என்பது அவ்வளவு சுலபமான காரியமா யில்லை. எத்தனையோ நாவல்களில் கதாநாயகர்கள் சிறையிலிருந்து தப்பி ஓடியதாகத் தான் படித்திருந்த சம்பவங்களை யெல்லாம் அவன் ஒவ்வொன்றாக எண்ணி எண்ணிப் பார்த்தான். ஆனால் அவை ஒன்றும் அவன் இருந்த நிலைமைக்குப் பொருத்தமா யில்லை.

நாளாக ஆக, விடுதலை வெறி அவனுக்கு அதிகமாகிக் கொண்டிருந்தது. என்னவெல்லாமோ சாத்தியமில்லாத யோசனைகளும் யுக்திகளும் மனதில் தோன்ற ஆரம்பித்தன.

இதற்கிடையில், சிறைச்சாலையின் பெரிய வெளிச் சுவர்களைத் தாண்டிக் கொண்டு, இடையிடையே யுள்ள சின்னச் சுவர்களைத் தாண்டிக் கொண்டு, மரண தண்டனை அடைந்த கைதிகளின் தனிக் காம்பவுண்டு சுவரையும் தாண்டிக் கொண்டு சில செய்திகள் வர ஆரம்பித்தன.

காங்கிரஸ் மாபெருந் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் சமரசப் பேச்சு நடந்து வருவது பற்றிய செய்திகள்தான். கூடிய சீக்கிரத்தில் அரசியல் கைதிகள் எல்லாரும் விடுதலை அடையக்கூடும் என்ற வதந்திகளும் வந்தன.

இவற்றை யெல்லாம் மற்ற அரசியல் கைதிகள் நம்பினார்கள். நம்பியதோடுகூடச் சிறையிலிருந்து வெளியேறியதும் எந்தத் தொகுதிக்குத் தேர்தலுக்கு நிற்கலாம் என்பது போன்ற யோசனைகளிலும் பலர் ஈடுபட ஆரம்பித்தார்கள்!

ஆனால் குமாரலிங்கத்துக்கோ விடுதலைப் பேச்சுகளில் எல்லாம் அணுவளவும் நம்பிக்கை ஏற்படவில்லை. சிறையிலிருந்து எப்படித் தப்பிச் செல்வது என்னும் ஒரு எண்ணத்தைத் தவிர வேறு எதற்கும் அவன் மனதில் இடம் கிடைக்கவில்லை.

கடைசியாக, அவன் அடங்கா ஆவலுடன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிட்டியது. தானே அவனைத் தேடி வந்தது என்று சொல்ல வேண்டும்.

ஹைகோர்ட்டில் கேஸ் முடியும் வரையில் அவனையும் அவனுடைய சகாக்களையும் வைத்திருந்த சிறையிலிருந்து அவர்களை வேறு சிறைக்கு மாற்றிக் கொண்டு போனார்கள். பலமான பந்தோபஸ்துடனே பிரயாணம் ஆரம்பமாயிற்று. எந்த ஊர்ச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள் என்பது அவர்களுக்கு அறிவிக்கப் படவில்லை. ஆயினும் ரயிலில் போகும் போது ஏதேனும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமலா போகும் என்று குமாரலிங்கம் எண்ணினான். கட்டாயம் கிடைத்தே தீரும் என்று நம்பினான். இத்தனை காலமும் மாறுனேந்தல் உலகநாதத் தேவருக்கு நேர்ந்தது போலவே எல்லாச் சம்பவங்களும் தன் விஷயத்திலும் நேர்ந்திருக்கின்றன அல்லவா? எனவே, இறுதிச் சம்பவமும் அவ்விதம் நேர்ந்தே யாகவேண்டு மல்லவா?

அவன் எண்ணியதற்குத் தகுந்தாற் போல் வழியில் ரயில் பிரயாணத்தின் போது சிற்சில சம்பவங்கள் ஏற்பட்டு வந்தன. அவனுடன் சேர்த்துக் கொண்டு வரப்பட்ட மற்றக் கைதிகளை அங்கங்கே யிருந்த ஜங்ஷன்களில் பிரித்து வேறு வண்டிகளுக்குக் கொண்டு போனார்கள்.

கடைசியாகக் குமாரலிங்கமும் அவனுக்குக் காவலாக இரண்டே இரண்டு போலீஸ் சேவகர்களுந்தான் அந்த வண்டியில் மிஞ்சினார்கள்.

இரவு பத்து மணிக்குக் குமாரலிங்கம் சாப்பிடுவதற்காக அவனுடைய கை விலங்கைப் போலீஸார் எடுத்து விட்டார்கள். சாப்பிட்ட பிறகு விலங்கை மறுபடியும் பூட்டவில்லை.

ஏதேதோ கதை பேசிக் கொண்டு வந்த போலீஸ்காரர்கள் சிறிது நேரத்துக் கெல்லாம் கண்ணசந்தார்கள். உட்கார்ந்தபடியே தூங்கத் தொடங்கினார்கள். ஒருவன் நன்றாய்க் குறட்டை விட்டுத் தூங்கினான்.

குமாரலிங்கம் தன்னுடைய விதியின் விசித்திர கதிதான் இது என்பதை உணர்ந்தான். விதி அத்துடன் நிற்கவில்லை. அடுத்து வந்த ரயில்வே ஸ்டேஷனுக்குச் சற்றுத் தூரத்தில் கை காட்டிக்குப் பக்கத்தில் ரயில் நிற்கும்படி செய்தது. குமாரலிங்கம் வண்டியின் கதவைத் தொட்டான். தொட்டவுடனே அக் கதவு திறந்து கொள்ளும் என்ற நிச்சயம் அவனுக்கு இருந்தும், அது திறந்தபோது ஆச்சரியமாய்த்தானிருந்தது. போலீஸார் இருவரையும் மறுபடி ஒரு தடவை கவனமாகப் பார்த்தான். அவர்கள் தூங்கிக் கொண்டுதானிருந்தார்கள். ஒருவன் அரைக் கண்ணைத் திறந்து "இது என்ன டேஷன் அண்ணே!" என்று கேட்டுவிட்டு மறுபடியும் கண்ணை மூடிக் கொண்டான்.

அவ்வளவுதான்; திறந்த ரயில் கதவு வழியாகக் குமாரலிங்கம் வெளியில் இறங்கினான். ரயில் பாதையின் கிராதியைத் தாண்டிக் குதித்தான். இதெல்லாம் இவ்வளவு சுலபமாக நடந்து விட்டது என்பதை நம்ப முடியாமல் சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றான்.

ரயில் என்ஜின் 'வீல்' என்று கத்திற்று. உடனே ரயில் நகர்ந்தது. ரயில் நகர்ந்தபோது சற்று முன்னால்



திறந்த வண்டிக் கதவு மறுபடியும் தானே சாத்திக்கொண்டது.

அடுத்த கணத்தில் ஒரு பெரிய தடபுடலைக் குமாரலிங்கம் எதிர் பார்த்தான். போலீஸ் சேவகர் இருவரும் விழித்தெழுந்து கூச்சல் போடுவார்கள் என்றும், பளிச் சென்று அடித்த நிலா வெளிச்சத்தில் தன்னைப் பார்ப்பார்கள் என்றும். உடனே அவர்களும் ரயிலிலிருந்து கீழே குதிப்பார்கள் என்றும் எதிர்பார்த்தான். தான் ஓரே ஓட்டமாய் ஓட, அவர்கள் தன் முதுகை நோக்கிச் சுடுவார்கள் என்றும் நினைத்தான். துப்பாக்கிக் குண்டு பாய்ந்த உடனே கொஞ்சமும் வலிக்காது என்றும், குண்டு பாய்ந்தது தெரியாது என்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். எனவே கொஞ்ச தூரம் ஓடிய பிறகு தான் ஸ்மரணை இழந்து கீழே விழுவது வரையில் கற்பனை செய்து கொண்டான்.

ஆனால் அவ்வளவும் கற்பனையோடு நின்றது. நகர்ந்த ரயில் நகர்ந்தது தான். மூடிய கதவு மூடியதுதான். ஆர்ப்பாட்டம், சத்தம், துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றுமே யில்லை.

அந்தக் காலத்தில் சோலை மலையில் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொன்னம்மாளின் நினைவு குமாரலிங்கத்துக்கு வந்தது.

இது ஏதோ கடவுளின் செயல்! சோலைமலை முருகனின் அருள்! பொன்னம்மாளைக் கடைசி முறை பார்ப்பதற்குக் கடவுள் தனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்கிறார். அதை உபயோகப்படுத்திக் கொள்ளா விட்டால் தன்னைவிட நிர்மூடன் உலகில் யாருமே இருக்க முடியாது.

அவ்வளவுதான்; குமாரலிங்கம் நடக்கத் தொடங்கினான். வானத்தின் நட்சத்திரங்களைப் பார்த்துத் திசையைத் தெரிந்து கொண்டு விரைவாக நடக்கத் தொடங்கினான். தன் உள்ளங் கவர்ந்த பொன்னம்மாளைக் கடைசி முறையாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவனுடைய கால்களுக்கு ஒன்றுக்கு மூன்று மடங்கு சக்தியையும் விரைவையும் அளித்தது.

20. கதை முடிந்தது!

குமாரலிங்கம் ரயிலிலிருந்து தப்பிய ஏழாம் நாள், சுமார் 250 மைலுக்கு மேல் கால் நடையாக நடந்து சோலைமலை மணியக்காரர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மணியக்காரர் அவனைப் பார்த்ததும் முதலில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. யாரோ ஊர் சுற்றும் பிச்சைக்காரன் என்று நினைத்தார். "ஐயா! என்னை அடையாளம் தெரியவில்லையா?" என்று கேட்டதும், உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டார். "ஐயோ! குமாரலிங்கமா? இது என்ன கோலம்? அடாடா! இப்படி உருமாறிப் போய் விட்டாயே?" என்று அலறினார். குமாரலிங்கம் அக்கம் பக்கம் பயத்துடன் பார்த்துவிட்டு, மெல்லிய குரலில், "ஐயா! மெதுவாகப் பேசுங்கள். என் பெயரை உரத்துச் சொல்லாதீர்கள்!" என்று சொன்னான்.

"அப்பனே! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? ஏன் உன் பெயரை உரத்துச் சொல்லக் கூடாது என்கிறாய்?" என்று கேட்ட மணியக்காரர் மறுகணம் பெருந் திகிலுடன், "விடுதலைக்குப் பிறகு இன்னும் ஏதாவது செய்துவிட்டாயா, என்ன?" என்றார்.

"விடுதலையா? என்ன விடுதலை?" என்று ஒன்றும் புரியாத திகைப்புடன் குமாரலிங்கம் கேட்டான்.

"என்ன விடுதலையா? உனக்குத் தெரியாதா, என்ன? பின் எப்படி இங்கே வந்தாய்?" என்று மணியக்காரர் கேட்டது குமாரலிங்கத்தின் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று.

"ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லையே? என்னைச் சென்னைச் சிறையிலிருந்து கண்ணனூர் சிறைக்கு

ரயிலில் கொண்டு போனபோது வழியில் தப்பித்து ஓடி வந்தேன். இதை விடுதலை என்று சொல்ல முடியுமா? விடுதலை எப்படி நான் அடைந்திருக்க முடியும்? பிரிவி கவுன்ஸிலில் அப்பீல் இன்னும் தாக்கல் கூட ஆகவில்லையே? அப்படி அப்பீல் தாக்கல் ஆன போதிலும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. எந்தக் கோர்ட்டிலே எவ்வளவு தடவை அப்பீல் செய்தால்தான் என்ன பிரயோஜனம்? தலைவிதியை மாற்ற முடியுமா?" என்றான் குமாரலிங்கம்.

"தலை விதியாவது, ஒன்றாவது? அட அசட்டுப் பிள்ளை! இப்படி யாராவது செய்வார்களா? சர்க்காருக்கும் காங்கிரஸுக்கும் சமரசம் ஏற்பட்டு அரசியல் கைதிகள் எல்லாரையும் விடுதலை செய்து விட்டார்களே? தேசமெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருக்கிறதே? உனக்கு ஒன்றுமே தெரியாதா? ரயிலிலிருந்து நீ என்றைக்குத் தப்பித்துக் கொண்டாய்?" என்று பரபரப்புடன் பேசினார் மணியக்காரர்.

குமாரலிங்கத்தின் மனநிலை அச்சமயம் எப்படியிருந்தது என்று அவனாலேயே சொல்ல முடியாது. அதை நாம் எப்படிச் சொல்ல முடியும்? அதிசயமும் ஆனந்தமும், அவமானமும் அவநம்பிக்கையும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு அவன் உள்ளத்தில் பொங்கினித்தன.

"ஐயா! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மைதானா? அல்லது இந்த துரதிர்ஷ்டம் பிடித்தவனைத் தாங்களும் சேர்ந்து பரிகாசம் செய்கிறீர்களா?" என்று கேட்டான்.

மணியக்காரர் அவனுடைய கேள்விக்குத் தாமே பதில் சொல்வதற்குப் பதிலாகப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பத்திரிகைகளை எடுத்துக் காட்டினார்.

அந்தப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த விவரங்கள் மணியக்காரரின் கூற்றை உறுதிப்படுத்தின.

அதாவது காங்கிரஸுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் சமரசம் ஏற்பட்டு விட்டதென்றும், அதன் காரணமாக அரசியல் கைதிகள் எல்லாரும் விடுதலை செய்யப் படுவார்கள் என்றும் ஒரு பத்திரிகையில் இருந்தது. மறுநாள் பத்திரிகையில் இன்னின்ன கேஸைச் சேர்ந்தவர்கள் விடுதலை யாவார்கள் என்று கொடுக்கப்பட்டிருந்த விவரமான ஜாபிதாவில் "தளவாய்ப் பட்டணம் கலகக் கேஸ் கைதிகள்" என்றும் குறிப்பிட்டிருந்தது.

இதைப் பார்த்து விட்டுக் குமாரலிங்கம் சிறிது நேரம் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். ரயிலிலிருந்து தப்பியது முதல் அவனுடைய கால் நடைப் பிரயாணத்தின்போது கண்டு கேட்டு அநுபவித்த பல சம்பவங்களுக்கு அப்போதுதான் அவனுக்குப் பொருள் விளங்கிற்று.

உதாரணமாக, வழியில் பல இடங்களில் தேசியக் கொடிகளைக் கம்பீரமாகப் பிடித்துக் கொண்டு "வந்தே மாதரம்" "ஜே ஹிந்த்!" முதலிய கோஷங்களைப் போட்டுக் கொண்டு காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலம் வந்த காட்சிகளை அவன் தூரத்திலிருந்து பார்த்தான். அம்மாதிரி காட்சிகளைப் பார்க்க நேர்ந்த போதெல்லாம், "ஏது? இவ்வளவு அடக்கு முறைக்குப் பிறகும் நாட்டில் சுதந்திர இயக்கம் பலமாக நடக்கிறதே? இந்தியா தேசத்துக்குக்கூட விடுதலை உண்டு போலிருக்கிறதே!" என்று அவன் எண்ணினான். உண்மையில் அந்த ஆர்ப்பாட்டங்களுக் கெல்லாம் காரணம் என்னவென்பது இப்போது அவனுக்கு நன்றாய்த் தெரிந்தது.

இன்னும் பல இடங்களில் போலீஸாரைக் கண்டு அவன் அவசரமாக மறைந்து ஒளிந்து கொள்ளப் பிரயத்தனப் பட்டான். ஆயினும் அவன் பேரில் அவர்கள் சந்தேகப்படவும் இல்லை; சந்தேகப்பட்டு அவனைப் பிடிக்க முயலவும் இல்லை.

இன்னொரு சந்தர்ப்பத்தில் அவன் மிகவும் களைத்துப் போய்ச் சாலை ஓரத்துச் சாவடி ஒன்றின் தாழ்வாரத் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். திடீரென்று இரண்டு போலீஸ்காரர்கள் சமீபத்தில் வருவதைப் பார்த்து விட்டு, சட்டென்று திரும்பிப் படுத்துக் கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான்.


போலீஸ் ஜவான்கள் இருவரும் அவன் அருகில் நெருங்கியதும், அவர்களில் ஒருவன், "இவனைப் பார்த்தாயா? குமாரலிங்கத்தின் சாயலாகத் தோன்றுகிறதல்லவா?" என்றான். அதற்கு இன்னொருவன், "குமாரலிங்கம் இங்கே எதற்காக வந்து திக்கற்ற அநாதையைப்போல் சாவடியில் படுத்திருக்கிறான்? மேளமும் தாளமும் தடபுடல் படாதா இத்தனை நேரம் அவனுக்கு?" என்றான்.

இவர்களுடைய பேச்சு குமாரலிங்கத்துக்கு ஒரு மர்மப் பிதிராயிருந்தது. வேறு எந்தக் குமாரலிங்கத்தைப் பற்றியோ பேசுகிறார்கள் என்று எண்ணினான். தன்னைப் பற்றித்தான் அவர்கள் பேசியிருக்க வேண்டும் என்று இப்போது உறுதிப் பட்டது.

"ஐயா! இந்தச் செய்தி ஒன்றும் எனக்கு உண்மையில் தெரியாதுதான்! சாவதற்கு முன்னால் சோலைமலைக்கு ஒரு தடவை எப்படியும் வரவேண்டும், தங்களையும் தங்கள் குமாரியையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் ரயிலிலிருந்து தப்பித்து வந்தேன். போலீஸார் என்னுடைய சொந்த ஊரிலே கொண்டு போய் என்னை விட்டு விடுதலைச் செய்தியைச் சொல்ல எண்ணியிருந்தார்கள் போலிருக்கிறது. இந்த ஒரு வாரமும் நான் பட்ட கஷ்டங்களுக்கு அளவேயில்லை. அவ்வளவும் வீண் என்று இப்போது தெரிகிறது. என்னைப்போல் மூடன் வேறு யாரும் இருக்க முடியாது!" என்றான் குமாரலிங்கம்.

"அப்பனே! போனதைப் பற்றி ஏன் கவலைப் பட வேண்டும்? எப்படியோ நீ இங்கு வந்து சேர்ந்தாயே? அதுவே பெரிய காரியம்!" என்றார் மணியக்காரர்.

"ஐயா! பொன்னம்மாள் எங்கே? அவளைப் பார்த்து விட்டு நான் போக வேண்டும்" என்றான் குமாரலிங்கம்.





"அவ்வளவு அவசரம் வேண்டாம், தம்பி! பொன்னம்மாள் அந்தப் பாழடைந்த கோட்டையிலே போய் உட்கார்ந்திருக்கிறாள். சதா சர்வ காலமும் அங்கேதான் அவளுக்கு வாசம். குளித்துச் சாப்பிட்டு விட்டு அவளைப் போய்ப் பார்க்கலாம்!" என்று மணியக்காரர் சொன்னார். உடனே ஊர் நாவிதரையும் அழைத்து வரும்படி செய்தார்.

அவர் விருப்பத்தின் படியே குமாரலிங்கம்

க்ஷவரம் செய்து கொண்டு ஸ்நானம் செய்து புதிய உடை உடுத்திக் கொண்டான். அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டுக் கோட்டைக்குப் புறப்பட்டான். மணியக்காரரும் அவனோடு கிளம்பிச் சென்றார். போகும்போது, "அப்பா! குமாரலிங்கம்! உன்னைப் பிரிந்த துயரம் பொன்னம்மாளை ரொம்பவும் பிடித்திருக்கிறது. திடுதிப்பென்று அவள் முன்னால் தோன்றிப் பயப்படுத்தி விடாதே! படபடப்பாகப் பேசாதே! கொஞ்சம் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்!" என்று மணியக்காரர் எச்சரித்தார்.

இந்த எச்சரிக்கை யெல்லாம் எதற்காக என்று அப்போது குமாரலிங்கத்துக்கு அவ்வளவாக விளங்கவில்லை. பொன்னம்மாளைப் பார்த்துப் பேசிய பிறகு தான் விளங்கிற்று.

மணியக்காரரும் குமாரலிங்கமும் வந்ததைப் பொன்னம்மாள் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. அவர்களைப் பார்த்தும் பாராதது போல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். இதைப் பொருட் படுத்தாமல் குமாரலிங்கம் அவள் அருகில் சென்று உட்கார்ந்து, "ஏன் இவ்வளவு பராமுகம்? இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறேனே, பிரியமாக வரவேற்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? ஒருவேளை என்னை மறந்து விட்டாயா? அல்லது அடையாளம் தெரியவில்லையா?" என்று மிக்க பரிவோடு கேட்டான்.

அவ்வளவு நேரமும் சும்மா யிருந்த பொன்னம்மாள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "நீங்கள் யார்? அடையாளம் எனக்குத் தெரியத்தான் இல்லை!" என்றாள்.

"நான்தான் குமாரலிங்கம்; உனக்குக் கூட அடையாளந் தெரியாதபடி அவ்வளவு மாறிப்போய் விட்டேனா? அல்லது உன் மனந்தான் மாறிவிட்டதா?" என்றான் பொன்னம்மாளின் காதலன்.

"குமாரலிங்கமா? அது யார்? நான் கேட்டதில்லையே?" என்று பொன்னம்மாள் சொன்ன போது குமாரலிங்கத்துக்குத் திக் என்றது.

"பொன்னம்மா! உண்மையாகத் தான் பேசுகிறாயா? அல்லது விளையாட்டா? குமார





லிங்கத்தை அவ்வளவு சீக்கிரமா மறந்து விட்டாய்!''

"ஐயா! குமாரலிங்கம் என்று நான் கேட்டது மில்லை; என் பெயர் பொன்னம்மாளும் இல்லை! வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதீர்.''

குமாரலிங்கத்தின் குழம்பிய உள்ளத்தில் பளிச்சென்று ஒரு ஒளிக் கிரணம் தோன்றியது.

"பொன்னம்மாள் இல்லாவிட்டால், பின்னே நீ யார்?'' என்று கேட்டான்.

"என்னைப் பார்த்தால் தெரியவில்லையா? சோலைமலை இளவரசி நான்; என் பெயர் மாணிக்கவல்லி!''

இதைக் கேட்டதும் குமாரலிங்கத்தின் உள்ளத்தில் ஒரு பெரும் வேதனை உதித்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு, தயக்கம் தொனித்த குரலில், "மாணிக்கவல்லி! நான்தான் மாறநேந்தல் இளவரசன். என்னைத் தெரியவில்லையா?'' என்றான்.

"ஆ! ஏன் பொய் சொல்கிறீர்? மாறநேந்தல் இளவரசர் இப்படியா இருப்பார்?'' என்று சொல்லிவிட்டுப் பொன்னம்மாள் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பின் ஒலி குமாரலிங்கத்துக்கு உண்மையைத் தெளிவாக உணர்த்தியது. பொன்னம்மாளின் அறிவு பேதலித்து விட்டதென்றும், இனித் தன்னை ஒரு நாளும் அவள் அறிந்து கொள்ளப் போவதில்லையென்றும் உணர்ந்தான். அதே சமயத்தில் அவனுடைய இருதய வீணையின் ஜீவநரம்பு படீரென்று வெடித்து அறுந்தது.

* * *

தமிழ் நாட்டில் உள்ள முருகனுடைய கோயில்களில் களை பொருந்திய முகத்துடன் கூடிய இளம் வயதுச் சாமியார் ஒருவரை நீங்கள் பார்க்க நேர்ந்தால் அவர் யார் என்று விசாரித்துப் பாருங்கள்.

'சோலைமலைச் சாமியார்' என்று பதில் சொல்வார்கள். அதோடு அவர் உலகப் பற்றை அடியோடு ஒழித்த பால சந்நியாசி என்றும், பரம பக்த சிகாமணி என்றும், பூர்வாசிரமத்தில் அவர் 'தேசத் தொண்டர் குமாரலிங்கம்' என்றும் கூடத் தெரிந்தவர்கள் சொல்வார்கள். (முற்றும்)

நரம்புச் சோர்வு உங்கள்
ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையும்
கெடுக்கும்படி விடாதீர்கள்.



உங்கள் நரம்புகள் சோர்வடைந்து உங்களை மனமுடைந்தும் வெடு வெடுப்பாகவும் சந்தோஷமில்லாமலும் இருக்கும்படி செய்யும் பொழுது, நரம்புகளுக்கு போஷாக்கு கொடுத்து தேகத்தை சமன கூட்டும் ஆகாரத்தை உட்கொள்ள சிறிதும் தாமதம் செய்யாதீர்கள்.

நரம்புகளுக்கு போஷாக்கு கொடுக்க மிகவும் ருசியுள்ள ஒரு கோப்பை "ஓவல்டின்" தவறாமல் இரவுதோறும் அருந்துங்கள். அது உங்கள் நரம்புகளுக்கு சமனப்படவும் மற்றும் தேகத்துக்கும் மூளைக்கும் ஆரோக்கியம் கொடுக்கவும் வேண்டிய உணவு சத்துக்களை அளிக்கிறது. ஓவல்டின், முக்கியமான பால் மால்ட் புதிய முட்டையுடன் கூடிய பலவித சத்துக்கள் ஆரோக்கியத்துக்கும் மற்றும் தேக ஆரோக்கியத்துக்கும் அவசியமான இதர உணவு சத்துக்களும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பூர்ணமான உணவு.



OV/100


'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'

சகல மருந்து வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும், கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:– கிரஹாம்ஸ் டிரேடிங் கோ (இந்தியா) லிட்., த. பெ. நெ. 1205. மதராஸ்: பம்பாயிலும், கராச்சி கல்கத்தாவிலும்:

தி இங்கிலீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாபரேடிவ் ஹோல்சேல் சொஸைடி லிட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா.வீழிநாதன்

"இந்த வரனைக் கை நழுவ விட்டால் அப்புறம் பிள்ளைக்குக் கல்யாணம் ஆக எவ்வளவு நாள் ஆகுமோ? பணமும் கிடையாது; சொத்தும் கிடையாது. இங்கே அப்புறம் வேறு யார் வருவார்கள்? ஜனங்கள் பிள்ளையையா பார்க்கிறார்கள்? பணத்தை யல்லவா பார்க்கிறார்கள்! வந்திருக்கும் வரனை விடாமல் எப்படியாவது முடித்துவிட வேண்டும்" என்று தீர்மானித்தவளாய் வெகு பிரயாசைப் பட்டாள் ஜாகேசுவரி. கடைசியாக அவளுக்கு அதில் வெற்றியும் கிடைத்தது.

"உனக்கென்ன? வாயில் வந்ததை நீ சொல்லிவிட்டுப் போகிறாய். கஷ்டப்பட வேண்டியவன் நான் அல்லவா? தன் வயிற்றுச் சோற்றுக்குத் தாளம் போடுபவனுக்குக் கல்யாணம் செய்து வைப்பது நியாயமே இல்லை என்று எனக்குப் படுகிறது. அதுமட்டும் இல்லை; இப்பொழுது நாம் பணத்துக்கு எங்கே போவது? அந்தக் கவலை வேறு என்னை வாட்டுகிறது. கல்யாணச் செலவுக்குக் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது வேண்டும். கூரைப் புடவை, நகைகள் முதலிய செலவுக்குத் தனியாக வேறு வேண்டும். (காதுகளைக் கையால் பொத்திக் கொண்டு) வேண்டாம், அம்மா! என் நிலைமைக்குத் தாங்காது. பின்னால் பார்த்துக் கொள்ளுவோம்" என்றார் தயாநாத பாபு.

ஜாகேசுவரி இந்த வாதங்களை யெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல், "நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அவர்கள் எதாவது கொடுக்க மாட்டார்களா?" என்றாள்.

"அவர்கள் கொடுக்கிறார்களோ, இல்லையோ. நான் போய் அவர்களிடம் கேட்க மாட்டேன்."

"உங்களை யார் கேட்கச் சொன்னது? அவர்கள் தானாகவே கொடுப்பார்கள். பெண்ணுக்குக் கல்யாணம் என்றால் செலவழிக்காமலே இருந்து விடுவார்களா, என்ன? நன்றாயிருக்கிறதே, நீங்கள் சொல்லுவது! அதுவும் தீனதயாள் பாபு அது மாதிரி ஆசாமி இல்லவே இல்லை. அவருக்கும் அந்தப் பெண்ணைத் தவிர வேறு குழந்தை இல்லை. அப்படியே செலவழிக்காமல் மிச்சம் பிடித்து வைக்கிறார் என்றே வைத்துக் கொள்ளுங்கள். கடைசியிலே யாருக்குக் கொடுக்கப்போகிறார்கள்? எல்லாம் பெண்ணுக்குத்தானே?"

தயாநாத பாபுவுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. "அவர்கள் கொடுத்தால் கொடுக்கட்டும், கொடுக்காவிட்டால் போகட்டும். நீங்கள் இவ்வளவு கொடுங்கள் என்று நான் அவர்களைக் கேட்கவே மாட்டேன். கடன்வாங்கிச் செலவழிக்கவும் நான் தயாராயில்லை. கடன் வாங்குகிறேன் என்றே வைத்துக் கொள். அதை அடைப்பதற்கு வழி?" என்றார்.

ஜாகேசுவரி, அவருடைய இந்த ஆட்சேபத்தையும் பொருட் படுத்தாமல், "அவர்கள் கட்டாயம் கொடுப்பார்கள். கொடுக்காமல் இருக்க மாட்டார்கள். நிச்சயத் தாம்பூலத்தின் பொழுது ஆயிரம் ரூபாயாவது கொடுப்பார்கள். அதற்குக் குறையவே குறையாது. கல்யாணச் செலவுக்கு இவ்வளவு போதுமானது. நகைகளுக்கு ஒரு கடையில் ஏற்பாடு செய்து

விட்டால் போகிறது. நிச்சயத் தாம்பூலத்துக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறவர்கள், கல்யாணத் தன்றைக்கும் ஒரு ஆயிரம் ரூபாயாவது கொடுக்க மாட்டார்களா? அதைக் கொண்டு போய் நகைக் கடைக்காரனுக்குக் கொடுத்து விட்டால் போகிறது. என்ன, நான் சொல்லுகிறது? அப்படியே இருநூறு மூந்நூறு கொடுக்க முடியாமல் போய் விட்டால் கொஞ்சங் கொஞ்சமாக எப்படியாவது கடனை அடைத்துக் கொள்ளலாம். அதற்குள் அவனுக்கும் ஒரு வழி ஏற்படாமலா போய்விடப் போகிறது?'' என்றாள்.

தயாநாத பாபு சற்று ஆத்திரத்துடன், "வழியாவது, மண்ணாங்கட்டியாவது? சீட்டாடிக்கொண்டு, ஊர் சுற்றும் காலிக்கு எவன் வேலை கொடுப்பான் என்று நினைத்தாய்?'' என்றார்.

'இவர் மட்டும் கல்யாணத்துக்கு முன்னால் எப்படி யிருந்தாராம்? நான் இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் இவருக்குத் தானும் நாலு காசு சம்பாதிக்க வேண்டும் என்னும் அக்கறை ஏற்பட்டது. ஒரு வருஷத்துக்குள் எப்படியோ வேலை தேடிக் கொண்டுவிட்டார்' என்று மனதில் எண்ணிக் கொண்டவளாய் ஜாகேசுவரி, "எல்லாம் மாட்டுப் பெண் வந்தானானால் தானாக அவனும் சரியாகி விடுவான். பாருங்களேன், நான் சொல்லுகிறது பலிக்கிறதா, இல்லையா என்று. நீங்கள் எப்படி யிருந்தேளாம்? நினைத்துப் பாருங்கள். கழுத்திலே நுகத்தடியை வைத்த பிறகு தானாக ஆட்ட பாட்டம் எல்லாம் அடங்கி விடும். சோம்பேறிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கு இதுதான் வழி!'' என்றாள்.

தயாநாத பாபு எந்த விஷயத்திலாவது தான் தோல்வியுற நேர்ந்து விட்டால், பத்திரிகையை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்து விடுவார். தம் தோல்வியை மறைத்துக் கொள்ள இதை ஒரு உபாயமாக அவர் கையாண்டு வந்தார். அதே மாதிரி இப்போதும் மேற் கூறிய பேச்சுக்குப் பிறகு அவருடைய கையில் பத்திரிகை இருந்தது.

— நான்காம் அத்தியாயம் —

மாப்பிள்ளை ஊர்வலம்

பூன்வஷி நினதயாள் நல்லவர்களிடத்தில் நல்லவிதமாகவும், துஷ்டர்களிடத்தில் அதற் கேற்றாற் போலும் நடந்து கொள்ளுபவர். தயாநாதபாபு அவரிடம் 'நான்' என்ற அகம்பாவத்துடன் 'ஆயிரம் வேண்டும், இரண்டாயிரம் வேண்டும்' என்று கேட்டிருந்தாரானால் நினதயாள்பாபு அவரைக் கட்டாயம் ஏமாற்றி வாயில் போட்டுக் கொண்டிருப்பார். ஆனால் தயாநாதபாபு அவரிடம் நடந்துகொண்ட விதம் அவரை வசீகரித்துவிட்டது. முதலில் நினதயாள் பாபு 'மொத்தம் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும்' என்று தன் மனத்துள் நிர்மானித்திருந்தார். ஆனால் தயாநாத பாபுவின் பெருந்தன்மை, அவரை நிச்சயத் தாம்பூலத்துக்கே ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி செய்து விட்டது.

"ஆமாம், நிச்சயத்தாம்பூலத்துக்கு ஆயிரத்தைக் கொண்டு போய்க் கொட்டி விட்டு வந்து விட்டீர்களே, கல்யாணத் தன்



மரத்தில் இருப்பவர்:—"ஐயையோ, ஓடிப்போயிடுங்க! மரம் உங்க தலைமேலே உளுந்துடப் போறது!''

றைக்கு அதற்குக் குறைத்துக் கொடுத்தால் நன்றா யிருக்குமா?" என்றாள் அவருடைய மனைவி மானவி.

"பணத்துக் கென்ன? இன்றைக்குப் போகிறது, நாளைக்கு வருகிறது. இந்தக் காலத்தில் அந்தமாதிரி நல்ல மனுஷ்யர்கள் கிடைக்க வேண்டுமே! அவர்கள் எவ்வளவு அழகாக நடந்து கொண்டார்கள், தெரியுமா? 'அவனை உங்கள் பையன் என்றே எண்ணிக் கொள்ளுங்கள். நாங்கள் வேறு நீங்கள் வேறு என்று எண்ணாதீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் எங்களுக்குப் பரம திருப்தி!' என்று சொல்லி விட்டார்கள். அப்படியிருக்கும் பொழுது, அதற்குக் குறைத்துக் கொடுத்தால் நன்றாயிருக்குமா? மரியாதைக்கு மரியாதை செலுத்துவதுதானே நியாயம்!" என்றார் தீனதயாள்பாபு.

தீனதயாள்பாபு, இவ்வளவு தாராள மனப்பான்மையுடன் ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு வந்தது, தயாநாதபாபுவுக்கு அனர்த்தமாக முடிந்தது. அவருக்குப் பிறரிடம் போய்க் கடன் வாங்குவது என்றாலே பயம். அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு இந்தக் கல்யாணத்தை எப்படியாவது ஒப்பேற்றி விடலாம் என அவர் மனத்துள் நிர்மாணித்திருந்தார். ஆனால் தீனதயாள் பாபுவின் இந்தத் தாராளம் அவர் போட்டிருந்த குறைந்த செலவுத் திட்டத்தை அடியோடு மாற்றிப் புதுத் திட்டம் ஒன்றைப் போடும்படி செய்துவிட்டது. அவருடைய மனக்குதிரை கட்டறுத்துக் கொண்டு ஆடல் — பாடல், வேடிக்கை — விளையாட்டுகள் முதலிய கல்யாண விமரிசைகளைப் பற்றிய சிந்தனையில் ஓட ஆரம்பித்து விட்டது. அவரால் அதைக் கட்டி அடக்கிப் போட முடியவில்லை. அவர் அதிக விமரிசையாகவே கல்யாணத்தை நடத்தி விடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். பொன் வைக்கிற இடத்திலே பூ வைப்பது என்பார்களே, அப்படி ஏதாவது சொற்பமாக நகைகள் செய்து போட்டுவிடலாம் என்று முன்னால் அவர் எண்ணியிருந்தார். இப்பொழுது அந்த எண்ணம் மாறி, ஊரார் கண்டு மயங்கும்படி நகைகள் செய்து போட்டுப் பரிசம் வைக்க வேண்டும் என்று நிச்சயித்துவிட்டார். கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய்க்கு நகைகள் செய்ய ஆரம்பித்து விட்டார். நகைக் கடைக்காரனுக்கு ஆயிரம் ரூபாய் அடுத்த வாரம் தருவதாகக் கூறித் தவணை கேட்டுக் கொண்டார். அவனும், 'முதல் கைக்கு வந்துவிட்டது; லாபம்தானே வரவில்லை? அடுத்த வாரம் வாங்கிக் கொண்டால் போகிறது' என்று எண்ணி அதற்குச் சம்மதித்து விட்டான். இவ்வளவு நகைகள் செய்த இடத்தில் 'சந்திர ஹாரம்' மட்டுந்தான் செய்யாமல் தங்கிவிட்டது. வைரச் சந்திர ஹாரம் செய்வதற்குக் குறைந்தது ஒரு ஆயிரம் ரூபாயாவது வேண்டும். தயாநாத பாபு, 'கையோடு கையாக அதையும் செய்து விட்டால், பிறருடைய ஏச்சுக்கு ஆளாகாமல் இருக்கலாமே!' என்று எண்ணினார். ஆனால் அவருடைய மனைவி ஜாகேசவரி அதற்கு இடம் கொடுக்கவில்லை.

தயாநாத பாபு சற்றுக் கோபத்துடன், "உனக்கென்ன? நீ பேசாமல் வீட்டில் உட்கார்ந்திருக்கப் போகிறாய்! நான்



அல்லவா ஊராரின் ஏச்சுக்கு ஆளாக வேண்டி வரும்?'' என்றார்.

"ஆமாம், உங்களிடம் பணம் இருந்தால் தாராளமாகச் சந்திர ஹாரம் செய்து போடுங்களேன்!'' யார் 'வேண்டாம்' என்று தடுக்கிறார்கள்?''

"கல்யாணத்தன்று அவர்கள் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது கொடுக்க மாட்டார்களா? அதை நம்பிச் செய்து போட்டு விடலாமே என்றுதான் யோசித்தேன்.''

"கொடுப்பார்கள் என்று எண்ணி இப்பொழுதே பிடித்து நாக்கைத் நீட்டி வைத்துக் கொண்டிருக்கள்! கொடுக்காமல் இருந்து விட்டால் என்ன செய்வீர்களாம்?''

தயாநாத பாபு வெட்கத்துடன், "அதற்குச் சொல்லவில்லை. அவர்கள் ஏதாவது கொடுப்பார்களே, அதை அதற்குக் கொடுத்து விட்டால் போகிறது என்று எண்ணினேன்'' என்றார்.

"ஏதாவது கட்டாயம் கொடுக்கத்தான் கொடுப்பார்கள். ஆனால் நமக்கு மற்ற செலவுகளும் இருக்கிறதே! எல்லாவற்றுக்கும் நகை பண்ணிப் போட்டு விட்டால் மட்டும் போதுமா? பூரி தக்ஷிணை யெல்லாம் நிறையக் கொடுத்தால்தானே நாலு பேர் வாழ்த்துவார்கள்!'' என்றாள் ஜாகேசுவரி.

ஆகவே, மணமகளுக்குச் சந்திர ஹாரம் செய்து போடும் விஷயம் தற்காலிகமாக ஒத்திப் போடப்பட்டு விட்டது.

தயாநாத பாபு வேண்டுமானால் ஆடம்பரத்தையும் வெளிப் பகட்டையும் அனாவசியம் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ரமாநாத் 'அதுதான் மிக மிக முக்கியம்' என்று எண்ணினான். கிராமத்தார்கள் அவனுடைய கல்யாண விமரிசையைக் கண்டு மூக்கில் விரலை வைக்க வேண்டும் என்பது அவனுடைய அந்தரங்க எண்ணம். மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்துக்குப் பல்லக்குப் போதும் என்று எண்ணினார் தயாநாத பாபு. ஆனால் ரமாநாத், "அந்தப் பத்தாம் பசலி வியாபாரமே வேண்டாம்; மோட்டார்தான் வேண்டும். இல்லையென்றால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்!'' என்று பிடிவாதமாய்ச் சொல்லி விட்டான்.

தயாநாத பாபு எப்பொழுதுமே தனிமையை நாடுபவர். யாரிடமும் அதிகமாக நெருங்கிப் பேசுவதோ, பழகுவதோ இல்லை. ஆனால் அவருடைய பிள்ளை ரமாநாதோ, அவருக்கு நேர் எதிராக இருந்தான். யாரிடமும் நெருங்கிப் பழகுவான். ஆகவே, இந்தச் சமயத்தில் அவனுடைய நண்பர்கள் 'நான் முந்தி, நீ முந்தி' என்று அவனுடைய கல்யாண ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன் வந்தனர். கல்யாணத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் அவனுடைய சிநேகிதர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டன. எல்லாம் முதல்தரமான ஏற்பாடுகளே செய்யப்பட்டன. வாண வேடிக்கையா? முதல் தரம்;



சதிர்க் கச்சேரியா? அதுவும் முதல் தரம்; வாத்தியகோஷ்டியா? அதுவும் முதல் தரமே! எதற்குமே அங்கே இரண்டாந் தரம், மூன்றாந் தரம் என்ற பேச்சே மூச்சுக் காட்டவில்லை. இந்தத் தான் தோன்றித்தனமான செய்கைகள் எல்லாம் தயாநாத பாபுவை மிகவும் கவலையில் ஆழ்த்தின. ஆனால் அவரது ஆலோசனையைக் காது கொடுத்துக் கேட்பார் யாருமே இல்லை. வாய் திறக்க வழியில்லாமல், நடப்பது நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விட்டார் தயாநாத பாபு.

— ஐந்தாம் அத்தியாயம் —

ஒரே ஒரு குறை

ரஸிகர்கள் விரும்பிப் பார்க்கிறார்கள் என்றால் நாடகம் வெகு ஜோர் என்று அர்த்தம். அதேபோல வழியில் போகிறவர், வருகிறவர்கள் எல்லாரும் மேலே நகர முடியாமல் நின்று பார்க்க ஆரம்பித்து விட்டால், கல்யாண ஊர்வலம் வெகு பிரமாதமானதாகத்தான் இருக்க வேண்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம். நாடகத்தை நல்லதா, இல்லையா என்று பரிசீலனை செய்வதற்குக் குறைந்தது நாலைந்து மணி நேரம் பிடிக்கிறது. முழுவதும் இருந்து பார்த்தால்தான் ஒரு வித முடிவுக்கு வர முடிகிறது. கல்யாண ஊர்வலத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே ஒருவித முடிவுக்குச் சுலபமாக வந்துவிட முடியும். "பேஷ்! ஏற்பாடு ரொம்பப் பிரமாதம்!" என்ற வார்த்தைகள் கூட்டத்திலிருந்து வந்து விட்டால் போதும்; 'ஊர்வலம் வெகு பிரமாதம்' என்பது தானாகவே விளங்கிவிடும். இல்லையென்றால் அது மிகவும் மட்டரகம் என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொண்டு விடலாம். எடுத்த முயற்சி, பட்ட கவலை, செலவழித்த காசு எல்லாம் கரியாயிற்று என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் வழியில்லை. தயாநாத பாபுவின் வீட்டுக் கல்யாண ஊர்வலத்துக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது. பட்டண வாசமாயிருந்தால் அதை மூன்றாந்தரம் என்றுதான் சொல்வார்கள். கிராமமாக இருந்ததால் முதல் தரம் என்ற பட்டமே அதற்குக் கிடைத்தது. சிலர் கொட்டு முழக்கத்தைக் கேட்டுப் பரவசப் பட்டனர்; சிலர் 'பட்டிக் காட்டான் யானையைப் பார்ப்பது' போல வைத்த கண் வாங்காமல் மோட்டாரையே பார்த்துக்கொண்டு நின்றனர். சிலர் தாம்பாளங்களில் வெகு அழகாக வைக்கப் பட்டிருந்த பூச் செண்டுகளைக் கண்டும், அதன் வாசனையை நுகர்ந்தும், ஆனந்த பரவசமடைந்தனர். எல்லாவற்றையும்விட வாண வேடிக்கைதான் எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. ஆகாய வாணங்கள் 'புஸ்' என்று சீறிக்கொண்டு உயரே சென்று 'படார்' என்று வெடித்து விதவித நிறமுள்ள பூக்களைக் கக்கி, ஆகாயத்தில் இந்திரஜால வித்தை புரிந்து கொண்டிருந்தன. மயில் வாணங்கள் தோகையை விரித்துக் கொம்மாளத்துடன் ஆடின. கண் கொட்டாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தவர்களின் வாய்கள், 'பலே, பலே, பேஷ்!' என்று தங்களையறியாமலே முணு முணுக்கலாயின.

இதையெல்லாம் பத்மா சிறிதும் கவனிக்கவேயில்லை. அவள் மனம் தனக்கு வரப் போகும் கணவனை ஒரு தடவையாவது கண்ணாறப் பார்க்க வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது. புது மாட்டுப் பெண் வாசலில் போய் எப்படித் தலை நிமிர்ந்து பார்க்க முடியும்? அப்படிப் பார்த்தால் சிநேகிதிகளின் பரிகாசத்துக்கு ஆளாக வேண்டி வருமே! ஒருவருக்கும் தெரியாமல் அல்லவா பார்க்க வேண்டும்! மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் அவளுடைய வீட்டு வாசலை நெருங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய மனமும் 'சீக்கிரம்! சீக்கிரம்!' என்று அவளை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் அவளுடைய தோழிகள் இருவர் ஓடி வந்து அவளைக் 'கரகர' என்று பிடித்து இழுத்துக் கொண்டு மாடியை அடைந்தனர். 'இதுதான் சமயம்' என்று எண்ணித் தோழிகளுக்குத் தெரியாமல் மோட்டாரில் உட்கார்ந்திருந்த சமாசாரத்தைப் பார்த்தே விட்டாள். அடுத்த கணம் அவளுடைய உள்ளத்தில் தூங்கிக் கொண்டிருந்த அன்பு விழித்து எழுந்து ஒருவிதப் புத்துணர்ச்சியைப் பெற்றது.

(தொடரும்)

கண்ணம்மாவின் கல்யாணம்

கிரிஜா

எங்கள் பேச்சுசுவாரஸ்யத்தில் வழியின் தொலைவைப் பற்றிய நினைவே எங்களுக்கு இல்லை. "இதோ, கோவில்!" என்று துரை சொன்ன பொழுதுதான், நாங்கள் ஏழுமலையான் கோவில் அருகில் வந்துவிட்டோம் என்பதை உணர்ந்தோம்.

"என்ன, இவ்வளவு கிட்டத்திலா கோவில்?" என்று நானும், கண்ணம்மாவும் ஒரே சமயத்தில் ஒரே கேள்வியைக் கேட்டோம்.

"சரிதான்; உங்கள் சந்தோஷத்தில் இதுமாதிரி இன்னும் ஏழு மலை இருந்தால் கூட ஏறி வந்திருப்பீர்கள்! என்னாலே முடியாது, அப்பா!" என்று சொல்லிக் கொண்டே, துரை குளத்துப் படித்துறையில் அசந்து உட்கார்ந்து விட்டான்.

கலகலவென்று சிரித்தாள் கண்ணம்மா. துரை சொன்னதுபோல் எங்கள் சந்தோஷத்திற்கு முன் எதுவுமே ஒரு பொருட்டாக இல்லை. 'சந்தோஷம்' என்றால் சாதாரணமான சந்தோஷமா? இனிக் கிடைக்கவே கிடைக்காது என்று எண்ணி ஏங்கிய பொழுது எதிர்பாராமல் கிடைத்த சந்தோஷமல்லவா? அந்தச் சந்தோஷத்தில் நாங்கள் அழுதோம்; சிரித்தோம்; சொன்ன விஷயங்களையே திருப்பித் திருப்பிச் சொல்லி மகிழ்ந்தோம். இரவென்றும், பகலென்றும் எங்களுக்கு எங்கே தெரிந்தது? அப்படியே எங்கள் ஆயுசு பூராவும் பேசியே கழித்திருப்போம்! நல்லவேளை, துரை வந்து எங்கள் யௌவன வயதை எங்களுக்கு நினைவுபடுத்தி, எங்களை இங்கே இழுத்து வந்து கலியாணத்தையும் முடித்து வைத்தான்.

என்ன இது! அளவுக்கு மீறிய சந்தோஷத்தில் என் கதையின் முடிவை முதலில் சொன்னால் உங்களுக்கு என்ன விளங்கும்? கண்ணம்மாளைக் கொஞ்ச நேரம் பேசாமலிருக்கச் சொல்லிவிட்டு, இதோ அடியிலிருந்தே ஆரம்பிக்கிறேன்:

கையிலே காரணை பிடிக்கும் கொத்தனார் என் தகப்பனார். அவர் இருந்தவரை எனக்கு எந்தக் குறைவுமே வைக்கவில்லை. சாப்பிடுவதும், பள்ளிக்கூடம் போவதும், பளிங்கி விளையாடுவதும்தான் என் வேலை. அப்போதெல்லாம் குடும்பக் கவலையே எனக்கு இல்லை.

லீவு நாட்களில் மத்தியானம் ஒரு பொழுது மட்டும் என் தகப்பனார் வேலை செய்யும் இடங்களுக்குச் சாப்பாடு கொண்டு போவேன். அப்பொழுது என் தகப்பனாரும், மற்றவர்களும் சேர்ந்து செங்கல், சுண்ணாம்பினால் செய்து கொண்டிருக்கும் அழகான வேலைகளைக் கண்டு பிரமித்துப் போவேன். சித்தாள் வீசும் செங்கல்லை லாகவமாகப் பிடித்து வாங்கி, அளவாக உடைத்து, அழகாக அடுக்கும் அந்த அற்புத வேலையைச் செய்ய என் மனமும், கையும் துறுதுறுக்கும். அப்பா சாப்பிடும் நேரத்தில் நானும் இரண்டு செங்கல்லை அடுக்கி, காரணையால் காரையைப் பூசி மகிழ்வேன்.

திடீரென்று ஒருநாள் என் சந்தோஷத்தில் மண் விழுந்தது. விதி, கல்லும் சுண்ணாம்பும் கலந்த சுவராக வந்து என் தகப்பனாரின் தலையில் விழுந்தது! இடிபாடுகளுக்கு இடையிலிருந்து எடுத்த என் தகப்பனாரைச் சவமாகத்தான் கண்டேன்.

என் தாயும், நானும் என் தகப்பனாரின் கையால் கட்டப்பட்ட சுவர்களில் முட்டிக் கொண்டோம்; மோதிக் கொண்டோம். எங்கள் தலைகள்தான் வலித்தன. தகப்பனாரின் உயிர் திரும்பவில்லை.

"தம்பி! நீ பள்ளிக்கூடம் போனதும், பளிங்கி விளையாடியதும் போதும். இனி நம்ப குடும்பம் பிழைக்கிற வழியைப் பாரு!" என்று கண்ணில் நீர் ததும்பக் கட்டளையிட்டாள் என் தாயார்.

"என்ன சொல்கிறாய், அம்மா! பிழைக்கிற வழியா? அது எப்படி?" என்று நினைத்தபோது, என் தலை கிறுகிறுத்தது.

என் தாயைப் பின்தொடர்ந்து பல வீடு களில் ஏறி இறங்கினேன். கடைசியாக ஒரு செட்டியார் வீட்டில் இட்ட பணிகளை யெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டேன். இதற்கு மாதச் சம்பளம் ரூபாய் ஒன்பது. இந்த ஒன்பது ரூபாயில் குடிக்கூலி ரூபாய் ஒன்றரை போக, பாக்கி ரூபாய் ஏழரையில் தான் நான், என் தாய், தங்கை, தம்பி, கைக்குழந்தை ஆகிய ஐந்து ஜீவன்களும் ஜீவித்தாக வேண்டியிருந்தது.

கண்ணம்மா, என் ஒன்றுவிட்ட மாமன் மகள். தாயற்ற அவளும் என் மாமனும் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார்கள். கண்ணம்மாவின் குறுகுறுத்த பார்வையும், துடியான பேச்சும் என் மனதிற்கு ரொம்ப வும் பிடித்து விட்டது. சில 'காண்ட்ராக்டு' களில் என் தகப்பனார் மாமனையும் சேர்த் துக் கொள்ளுவார். அப்பொழுதெல்லாம் மாமன் எங்கள் வீட்டோடு வந்து தங்கு வார். எனக்கும், கண்ணம்மாவுக்கும் ஒரே குதூகலம்தான். பொழுது போவதே தெரி யாமல் விளையாடுவோம்; சிரிப்போம்; சண்டை பிடிப்போம்; உடனே சேர்ந்து கொள்ளுவோம்.

இப்படியாக ஆரம்பித்த எங்கள் நேசம் நாளடைவில் அன்பாக மாறியது. மாமனும், என் தாய் தகப்பனும் எங்களை முடி போட் டுப் பேசும் பேச்சுக்களும் எங்கள் அன் பிற்கு நல்ல அஸ்திவாரமாக அமைந்தது.

கண்ணம்மா யுக்த வயதை அடைந்தபின் மாமன் அவளை அழைத்து வருவதை அடி யோடு நிறுத்திவிட்டார். என் தாயார் மட்டும் அடிக்கடி மாமன் வீட்டுக்குப் போய் வருவாள். கண்ணம்மா சொன்ன விஷயங் களையும் என்னிடம் சொல்லுவாள். அதை அடிக்கடி சொல்லக் கேட்பதில் எனக்கு உண்டான ஆனந்தத்தை எப்படி விவரிப்பது?

திடீரென்று என் தந்தை காலமாகி விட்ட அன்று கண்ணம்மாவையும் கூட்டிக் கொண்டு வந்தார் மாமன். அந்த துக்க சமயத்திலும் கண்ணம்மாவின் அற்புத வளர்ச்சியைக் கண்டு மனம் பூரித்தேன். அன்று வெகு நேரம் வரை கண்ணம்மா எனக்கு ஆறுதல் கூறினாள். எங்கள் உருக்கமான வேண்டுகோளை மறுக்க விய லாமல், இரண்டு தினங்கள் மட்டும் கண்ணம் மாவை எங்கள் வீட்டில் இருக்க அனுமதித் தார் மாமன். அந்த இரண்டு தினங்களும் எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத தினங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாங்கள் கட்டுப் பயிராக்கிய அந்தச் சம்பங் கிக் கொடிப் பந்தலின் கீழ் உட்கார்ந்து எனக்கு ஆறுதல் கூறும் கண்ணம்மாவுடன் என்ன பேசுவது என்றே முதலில் எனக்கு விளங்கவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தேன். பிறகு என்னென்னவோ பேசினோம். சபதமும், சத்தியமும் கூடச் செய்துகொண்டு விட் டோம். அந்த இரண்டு நாட்களும் இரண்டு க்ஷணத்தில் கழிந்து விட்டதுபோல இருந் தது எங்களுக்கு. மாமன் என் உயிரையே பிரித்து அழைத்துச் செல்வது போல் கண்ணம்மாவை அழைத்துச் சென்று விட்டார்.

அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வ தாகச் சொல்லிச் சென்ற மாமன்கூட அப்புறம் அடிக்கடி வரவில்லை! எப்பொழு தாவது வந்தாலும் எங்கள் கலியாணத்தைப் பற்றிய பேச்சையே எடுப்பதில்லை! என் தாயார் ஆரம்பித்தால் கூடப் பேச்சை மாற்றி விடுவார்! மாமனின் இந்தச் செய்கை எனக்கு விளங்காத புதிராகவே இருந்தது.

2

அன்று செட்டியார் அழுது கொண் டிருக்கும் பிள்ளையைக் கொஞ்ச நேரம் வெளியே எடுத்துப் போகுமாறு சொன் னார். நான் வழக்கம் போல் அந்தக் குழந் தையைத் தூக்கி வந்து எங்கள் வீட்டி லிருந்த சம்பங்கிப் பந்தலடியில் வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டினேன்.

இருட்டு முன் குழந்தையைக் கொண்டு போய் அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு, செட்டியாரின் அனுமதிக்காகக் காத்திருந் தேன். திடீரென்று செட்டியார் வீட்டுப் பெண்கள் கூக்குரல் இட்டனர்!

"புள்ளை கழுத்திலே யிருந்த சங்கிலி எங்கேடா?" என்ற கேள்வியோடு வந்த ஆச்சி, என்னை எரித்து விடுபவள்போல் பார்த்தாள்.

"அட, திருட்டு நாயே! உன் முதுகுத் தோலை உரித்து விடுவேன்! எங்கேடா சங்கிலி?" என்று கேட்டுக் கொண்டே குதித்து எழுந்தார் செட்டியார்.

என் மூளை குழம்பியது; வார்த்தைகள் தடுமாறின. கையைப் பிசைந்து கொண்டே "ஐயோ, கடவுளே! எனக் கொன்றும் தெரியாதே!" என்றேன்.

"அடி செருப்பால்!" என்று செட்டி யார் ஓங்கிய கை, 'பளார்' என்று என் கன்னத்தில் பதிந்து உராய்ந்த வேகத்

தில் செவிகள் குப்பென்று அடைத்தன. என் முன் நின்ற செட்டியாரும், அவர் மனைவியும் பம்பரம்போல் சுழன்று கொண்டே மேலே எழும்பினார்கள். என் நினைவும் மங்கியது.

தோல் பெல்டின் அடி என் முதுகில் 'சுளீர்' என்று விழுந்த பொழுதுதான் மறுபடி எனக்கு உணர்வு வந்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டு நாலா புறமும் பார்த்தேன். ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரண்டு ஜவான்கள், செட்டியார் இத்தனை பேரும் என்னைச் சுற்றி உறுமிக் கொண்டு நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர் கையில் சுழன்று கொண்டிருந்த தோல் பெல்ட் மறுபடி மேலே எழும்பிற்று. 'சுளீர்' 'சுளீர்' 'சுளீர்' என்று மேல் சட்டையைக் கிழித்துக் கொண்டு, முதுகுத் தோலை மழுக்கிக் கொண்டு விழுந்தது அடி.

அதற்கேற்றாற்போல் விதியும் எனக்குச் சதி செய்திருந்தது. இல்லாவிடில் அறுந்து விழுந்த சங்கிலி சம்பங்கிக் கொடியின் வேரிலா சிக்கிக் கொண்டு இருக்க வேண்டும்? என் வீடு முழுதும் சோதனை போட்ட செந்தலைப் புலிகள் அதைக் கண்டு பிடித்து, நான் அங்கே ஒளித்து வைத்ததாக முடிவு செய்தனர். அவர்கள் என் மீது சுமத்திய குற்றத்தை ஒப்புக் கொண்டு கோர்ட்டாரும் எனக்கு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தனர்.



"ஏழைக் குடும்பம், நாதியின்றித் தவிக்கப் போகும், ஐயா! அந்தப் புள்ளையை மன்னிச்சு விட்டு விடுங்க!" என்று பரிதாபமாகக் கெஞ்சினாள் என் தாயார்.

"உன் குடும்பத்தைப் பற்றி எங்கள் சட்டத்தில் எதுவும் சொல்லவில்லையே, அம்மா!" என்று ஏளனம் செய்தார் இன்ஸ்பெக்டர்.

வேறு வழியின்றி, என்னைப் பார்க்க வந்த மாமன் காலில் விழுந்து, எப்படியாவது நான் வரும் வரை என் தாயைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கெஞ்சினேன்.

* * *

எப்படியோ அந்தப் பயங்கரமான ஒரு வருடமும் மெள்ளக் கழிந்தது. ஜில்லென்ற வெளிக் காற்றுப் பட்டதும் மரத்துப் போயிருந்த என் உடலிலும் சற்றே உணர்ச்சி பிறந்தது. துடி துடிக்கும்

உள்ளத்தோடு ஓடினேன், என் தாயைக் காணும் ஆவலுடன்.

"ஐயோ, கடவுளே! எங்கே என் தாய்?"—பதை பதைக்கும் உள்ளத்தோடு பக்கத்து வீட்டில் விசாரித்தேன். அவர்கள் சொன்ன செய்தி இதுதான்:—

நான் சென்ற மறு மாதமே வைசூரியால் என் தம்பி இறந்தான்; என் மாமன் உதவியை ஏற்க விரும்பாத தாய் எப்படியோ இரண்டு மாதங்களைக் கடத்தினாள். பிறகு அவள் வறுமை நோய் அதிகரிக்கவே இரவு நேரத்தில் குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்து தன் உயிரையே மாய்த்துக் கொண்டு விட்டாள்!

வெடித்துக் குமுறிய என்னுடைய நெஞ்சிற்குச் சிறிது ஆறுதலளிக்கும் செய்தியும் ஒன்று இருந்தது. அது, கண்ணம்மாவுக்கு இன்னும் கலியாணமாகவில்லை என்பது தான். உடனே சென்று அவளைக் கண்டு கதறவேண்டுமென்று துடித்தது அநாதையான என் உள்ளம். ஆனால், என் தாயின் முகத்துக்காகவே என்னை மதித்து வந்த மாமன் இப்பொழுதும் மதிப்பார் என்பது என்ன நிச்சயம்?

தீவிரமாக வேலை செய்தது என் மூளை. நேரான வழியில் முனைந்து முன்னுக்கு வந்து, என் மாமனின் மதிப்பையும் பெற்றுக் கண்ணம்மாவை அடைவது என்றால் அது இப்போதைக்கு ஆகிற காரியமா? ஆகவே, நான் செய்யாத எந்தக் குற்றத்திற்காகச் சிறை வாசத்தை அனுபவித்தேனோ,—நான் செய்யாத எந்தக் குற்றம் என் குடும்பத்திற்கே கொள்ளியாயிற்றோ, அதே குற்றத்தை — இல்லை, சுலபமாகப் பிழைக்கும் வழியைப் பின்பற்றுவது என்று நிர்மாணித்தேன். பணக்காரர்கள் பெட்டியில் துருப் பிடிக்கும் பணத்தைப் பிடுங்கி ஏழைகள் உபயோகிப்பது எப்படிக் குற்றமாகும்? ஒரு சில மாதங்கள் இதைச் செய்தாலே போதும். வேண்டிய பொருள் கிடைத்து விடும். பிறகு கண்காணாத சீமையில் கண்ணம்மாவுடன் சுகமாகக் காலம் கழிக்கலாம். இந்த வழியே என் மனதைக் குளிரச் செய்து கொதிப்பையும் சற்று அடக்கிற்று. 'அகப்பட்டுக் கொண்டு விட்டால்?' என்ற அச்சமும் பின்னோடு எழுந்தது. பூண்டிக் காட்டுக்குள் மறைந்து கொண்டு விடும் ஆளைச் சுலபத்தில் கண்டு பிடித்துவிட முடியுமா, என்ன?

பின்னும் விவரிப்பானேன்? பிழைக்கும் வழியறியாமல் திணறிக் கொண்டிருந்த வாலிபர்களில் சிலரை என் கூட்டாளிகளாக ஆக்கிக்கொண்டு, அடித்தேன் வழிபறிக் கொள்ளை! கிட்டத்தட்ட நான் மதிப்பிட்ட அளவு பொருளும் கிடைத்துவிட்டது. இன்னும் ஒரே ஒரு கொள்ளை. பிறகு இந்தப் பிழைப்பிற்கே முழுக்கு போட்டு விடலாம்.

3

அன்று அந்தி மங்கும் நேரம். "அதோ வருகிறது, வண்டி!" என்றான் ஒருவன். எல்லோரும் எழுந்து ஆயத்தமாக மறைவிடங்களில் பதுங்கினோம். பூண்டி ரஸ்தாவில் வந்துகொண்டிருந்த வண்டியை வசமான இடத்தில் சூழ்ந்துகொண்டோம். "ஐயோ!" என்று அலறிக்கொண்டு சாய்ந்துவிட்டாள் வண்டியிலிருந்த பெண். அவள் குரல் என்னைத் திடுக்கிடச் செய்தது. வாட்டஞ்சாட்டமாக வளர்ந்திருந்த ஒரு வாலிபன் சாய்ந்தவளைத் தாங்கிக்கொண்டு, "ஐயோ, கண்ணம்மா! இது என்ன?" என்றான்.

என் உடல் சிலிர்த்தது. உள்ளம் படபடத்தது. வண்டியில் பொருத்தியிருந்த விளக்கைச் சட்டென்று எடுத்து, அப்பெண்ணின் முகத்தில் வெளிச்சம் விழும்படி தூக்கிப் பிடித்தேன். "ஆ! அவள் கண்ணம்மாவேதான்! — ஆமாம், அவளை அணைத்துப் பிடித்திருக்கும் அந்த ஆசாமி...?" — அடியுண்ட வேங்கைபோல் அறிவு மயங்கி அப்படியே கல்லாய் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன்.

என் கைவிளக்கையும், குதிரையையும் ஏக காலத்தில் தட்டிவிட்டான் வண்டிக்காரன். எகிறிக்கொண்டு பாய்ந்த குதிரை வண்டியுடன் சிட்டாய்ப் பறந்து மறைந்தது.

* * *

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, நான் பித்துப் பிடித்தவன்போல் பூண்டிக் காட்டைச் சுற்றிச் சுற்றி வந்தேன். எவள் பொருட்டு இந்தப் பயங்கரமான வேலையில் புகுந்து பணம் திரட்டினேனோ, அவளையே இழந்து விட்டபின் இந்தப் பணம் எதற்கு? ஏன், என் உயிரைத்தான் காப்பாற்றி என்ன ஆகவேண்டும்?

தவிக்கும் மனதோடு தடுமாறித் திரிந்து கொண்டிருந்த எனக்கு நாட்கள் எத்தனை கழிந்தன என்றே தெரியாது.

திடீரென்று ஒரு நாள் அந்தப் பூண்டி ஏரிக்கு நல்ல காலம் பிறந்தது. கார்களும் வண்டிகளும் அந்த ஏரிக் கரையை நாடி ஓடி வந்தன. இஞ்ஜினியர்களும், மற்றும் பலரும் வந்து அந்த ஏரியின் பல பாகங்களை அளந்து என்னென்னவோ 'பிளான்

போட்டார்கள். கடைசியில் ஏரியைச் சுற்றி அணை போட்டுப் பாலம் அமைக்கும் வேலையும் சீக்கிரமே ஆரம்பமாயிற்று.

பாலத்தின் வேலை ஆரம்பமான அன்று நானும் இன்ஜினியர் ஐயாவின் அனுமதியுடன் அவ் வேலையில் பங்கு எடுத்துக் கொண்டேன். ஏரிக் கரைக்குத் தெற்கே கரையோரத்தில் வளர்ந்திருந்த பன்னீர் மரத்தடியில் நான் வசிப்பதற்காக ஒரு சிறு குடிசையையும் அமைத்துக் கொண்டேன். அங்கிருந்த ஒரு மரத்தடியில் கட்டுப் பயிராக்கிய சம்பங்கிக் கொடியும் வெகு அழகாக மரத்தின்மீது படர்ந்து பூத்துக் குலுங்கி, பன்னீர் மரத்தோடு போட்டி யிட்டுக் கொண்டிருந்தது.

அந்த மரத்தடியில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுப் படுத்து, சென்றுபோன காட்சிகளையும், கண்ணம்மாவையும் நினைத்துக் கண்ணீர் வடிப்பேன். "சத்தியமாக, இந்தச் சம்பங்கிக் கொடி சாட்சியாகச் சொல்லுகிறேன்..." என்ற கண்ணம்மாவின் வார்த்தைகள் என் நினைவை விட்டு அகலவே யில்லை.

4

நாட்கள் மெள்ள ஓடின. காடாக இருந்த இடமெல்லாம் அழிக்கப்பட்டு, பலர் குடியேறவும் ஆரம்பித்து விட்டனர். பூண்டி ஏரியைப் பார்க்க வரும் ஜனங்களும் நாளுக்கு நாள் அதிகரித்தனர்.

அன்று சூரியன் மலைவாயிலில் நுழைந்து கொண்டிருந்தான். அப்போது எதிர்ப் பக்கம் திரும்பிய என் பார்வையில் விழுந்த காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது.

ஏரிக்கரையின் படித்துறையை ஒட்டியுள்ள கைப்பிடிச் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள் ஒரு பெண். அவள் கவனம் எங்கேயோ சென்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் காலடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மெள்ள மெள்ளப் படித் துறையில் ஒவ்வொரு படியாக இறங்குவதைப் பாராமல் இருப்பாளா?

என் மனம் படபடத்தது. இரண்டே எட்டில் பாய்ந்து சென்று அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தேன்.


"யாரம்மா, நீ? இந்நேரம் குழந்தை ஏரியில் விழுந்து சாக இருந்ததே!" என்று சொல்லிக் கொண்டே, நேருக்கு நேராக அவளைப் பார்த்த நான், திடுக்கிட்டு நின்று விட்டேன்.

"ஆ! அத்தான்! நீயா......?" என்று அலறிய கண்ணம்மா, தொப்பென்று கீழே விழுந்து விட்டாள்! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அதே சமயம் ஒரு பெரியவரும் சில பெண்களும் அங்கு வந்து குழந்தையைச் சூழ்ந்து கொண்டு விட்டனர்.

"இவளுக்கு இப்படித்தான் அடிக்கடி மயக்கம் வந்து விடுகிறது!" என்றாள் ஒரு பெண்.

"அப்படித் தெரிந்திருந்தும் குழந்தையை அவளிடம் விடலாமா?" என்றார் பெரியவர்.

"நீ யார், அப்பா? நல்ல வேளை! சமயத்தில் வந்து குழந்தையைக் காப்பாற்றினாயே! இந்தப் பெண்ணின் முகத்திலும் கொஞ்சம் தண்ணீரை அடித்து, மயக்கம் தெளிந்ததும் அந்தப் பங்களாவுக்கு வரச் சொல்லு!" என்று சொல்லிக் கொண்டே,



சற்றுத் தயங்கிய பெரியவரையும் அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவருடன் வந்த பெண்மணிகள்.

நான் ஏரித் தண்ணீரில் என் மேல் துண்டை நனைத்து வந்து கண்ணம்மாவின் முகத்திலும், வாயிலும் பிழிந்தேன்.

'களுக்' கென்ற சிரிப்புடன் எழுந்து உட்கார்ந்த கண்ணம்மா, "அத்தான், பயந்து விடாதே! அப்பா, அத்தாச்சி இவங்க நினைவு வரும்பொழுதெல்லாம் இப்படித்தான் நான் கண்ணை மூடிப் படுத்து விடுவேன். அது கிடக்கு, அத்தான்! நீ ஜெயிலிலே யிருந்து எப்பொழுது வெளியிலே வந்தே? இத்தனை நாளும் என்ன செய்துகிட்டிருந்தே? அதை யெல்லாம் சொல்லு!" என்றாள்.

"முதலில் உன் விஷயத்தைச் சொல்லு" என்றேன் நான் கம்மிய குரலில்.

"நீ ஜெயிலுக்குப் போன பிறகு, சிலர் என்னைப் 'பெண் பேச' வந்தாங்க. அப்புறம் யாருமே வரவில்லை. காரணம், என் அம்மாவுக்கு ஏதோ தீராத வியாதி இருந்ததாம். 'நல்ல வேளை!' என்று எண்ணி நானும் உன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். வருசம் ஒன்றுக்கு மேல் ஆகியும் நீ வரவே யில்லை! இந்தச் சமயத்தில் சின்ன வயதிலேயே வீட்டை விட்டு ஓடிப் போய்விட்ட என் பெரியப்பாரு மகன் துரைராஜு பட்டாளத்திலே யிருந்து ஒரு மாத ரஜாவிலே வந்து சேர்ந்தான்.

"வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்த எனக்குத் துரையண்ணன் வந்தது சற்று ஆறுதலாக இருந்தது. பட்டாளத்திலே தான் சேர்ந்த விஷயத்தை யெல்லாம் அண்ணன் கதை கதையாகச் சொல்லுவான். ஒரு சமயம் அண்ணனுடன் ஒரு கலியாண வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பும் போது இந்த ஏரிக்கரையிலே கொள்ளைக்காரங்ககிட்ட வசமா மாட்டிக் கிட்டோம். நல்ல காலம்தான்! வண்டிக்காரனுடைய சாமர்த்தியத்தால் தப்பிப் பிழைத்தோம். பிறகு லீவு முடிந்து அண்ணனும் ஊருக்குப் போய் விட்டது.

"எனக்குக் கலியாணமாகவில்லை என்ற ஏக்கத்தாலேயே கொஞ்ச நாளில் அப்பாரு படுத்த படுக்கையாகி விட்டாரு. வர வர அவரு உடம்பு கேவலமாகிப் போகவே, அண்ணனை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி கொடுத்தோம். தந்திக்குப் பதில் வருமுன்பே அப்பா இறந்து விட்டாரு. அவர் இறக்குமுன் அவர் வேலை செய்து வந்த வீட்டு முதலியாரை அழைத்து என்னை அவரிடம் ஒப்புவித்தாரு.

"பட்டாளத்திலே நடந்த கலகத்திலே அண்ணனும் சம்பந்தப் பட்டதால் அவனைத் தண்டித்து விட்டாங்களாம். அதனாலே வர முடியவில்லை என்றும், தண்டனை முடிந்து வரும் வரை பத்திரமாக இருக்கும் படியும் அண்ணன் பதில் எழுதி விட்டான். திக்கற்று, நாதியற்று நின்ற என்னை முதலியார் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார். அன்று முதல் இன்று வரை, அவங்க வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதும், அண்ணிமார்கள் இட்ட வேலைகளைச் செய்வதுமே என் பொழுது போக்கு. அவங்க வீட்டுக்கு வந்த விருந்தாளிங்கதான் இந்த ஏரியைப் பார்க்க வந்தபோது என்னையும் கூட்டி வந்தாங்க!" என்று சொல்லித் தன் கதையை முடித்து விட்டுப் பெருமூச்சு விட்டாள் கண்ணம்மா.

எதிர்பாராத சந்தோஷத்தால் திக்கு முக்காடிப்போன எனக்குப் பேச்சே எழும்ப வில்லை.

கண்ணம்மாவே பேசினாள்: "இத்தனை நாளும் இங்கே வேலை செய்யும் நீ பெரிய மச்சு வீடு கூடக் கட்டியிருப்பாய், இல்லையா?"—இதைச் சொல்லி விட்டுக் கண்ணம்மா வெடித்துக் கொண்டு வரும் பெருமூச்சுடன், "அவள் நல்ல அழகாய் இருப்பாளா?" என்றாள்.

"எவள்?" என்றேன் பெரும் வியப்புடன்.

"அவள்தான் உன் பெண்டாட்டி!" என்றாள் கம்மிய குரலில்.

"இருப்பாள்; ஆனால் உன்னைவிட அழகில்லை!"

நான் இதைச் சொன்னவுடன் கண்ணம்மா தன் முகத்தை ஏரிப் பக்கம் திருப்பிக் கொண்டு விட்டாள்.

வெண்ணிலவு மேலே மேலே ஏறிக் கொண்டே வந்து, ஏரி முழுவதும் வெள்ளி மய மாக்கிவிட்டது.

வெகு நேரத்திற்குப் பின் கண்ணம்மா எழுந்து முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டே, "என்னை அந்தப் பங்களா வரை கூட்டிப்போய் விட்டு விடுகிறாயா?" என்றாள்.

நான் எழுந்து முன்னால் நடந்தேன். கண்ணம்மாவும் மௌனமாக என்னைப் பின் தொடர்ந்தாள். பன்னீர் மரத்தருகில்

வந்ததும் நான் நின்று, "இதோ பார், கண்ணம்மா! இதுதான் என் மச்சு வீடு!" என்று என் குடிசையைச் சுட்டிக் காட்டினேன்.

கண்ணம்மா கண நேரம் கற்சிலைபோல் அசைவற்று நின்றுவிட்டாள். பிறகு ஒரு பெருமூச்சுடன், "அடியம்மா! இதுவெல்லாம் என்ன நாடகம்? எனக்குப் பிடிபடவே யில்லையே!" என்று சொல்லிக் கொண்டே தலையைக் கையால் பிடித்துக் கொண்டு பொத்தென்று கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து விட்டாள்.

அளவிட முடியாத சந்தோஷத்தால் பொங்கியெழுந்த உணர்ச்சியை என்னால் அடக்க முடியவில்லை. மண்டியிட்டு உட்கார்ந்து கண்ணம்மாவின் மடியில் என் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டேன்!

ஜில்லென்று வீசிய ஏரிக் காற்றும், பொலபொல வென்று உதிர்ந்த பன்னீர் மலர்களும், கொத்துக் கொத்தாய் விழுந்த சம்பங்கிப் பூக்களும், எனக்கு அடைக்கலம் தந்த கண்ணம்மாவின் மடியும் — எல்லாம் அன்று எனக்கு ஒரே சொர்க்க போகமாகவே இருந்தது!

வான சஞ்சாரம்

இசைத்தேனீ

மார்ச்சு 18உ திருச்சி நிலையத்தில் முழு நேரக் கச்சேரி செய்த டி. கே. ரங்காச்சாரியார் குறிப்பிடத் தக்க கலைச் சிறப்புடன் மேடைப் பிரபல்யம் பெற்று வருகிறவர். அன்று அவரது பல்லவி ராகமாம் சாவேரி கற்பனைப் பெருக்குடன் விரிவாயும் வனப்பாகவும் வெளிவந்தது. கடைசியில் பாடிய ராகமாலிகையும் சுகமா யிருந்தது.

20உ சென்னையில் வி. அங்கய்ய உடையாரின் கானம் கவனத்தைக் கவர்ந்தது. 'கல்யாணி ஹிந்தோளம், கீரவாணி ராகங்கள் எழில் நிறைந்திருந்தன.

திருவனந்தபுரம் சகோதரிகளில் பி. எஸ். லக்ஷ்மி 21உயும், கப்புலக்ஷ்மி 22உயும் திருச்சியில் பாடினார்கள். பாடியவை யெல்லாம் அவர்களது மூதாதையாரான நீலகண்ட சிவனின் சாகித்தியங்கள். லக்ஷ்மியின் கானம் இனிய குரலில் அநாயாசமாய் வெளி வந்தது. வஸந்தா ராகமும் உருப்படியும் மனோஹரமா யிருந்தன. கப்புலக்ஷ்மி ரீதிகௌளை, ஹமீர் கல்யாணி, கல்யாணி என்று பல ராகங்களையும் உருப்படிகளையும் வழங்கினார்.

23உ சென்னையில் டி. கே. பட்டம்மாளின் கச்சேரியில் பைரவி ராகமும் 'ஏறதி அன்ன பூர்ணே' என்ற புன்னாகவராளி கிருதியும் ரொம்பவும் சிறப்பா யிருந்தன.

செம்மை வைத்தியநாத பாகவதரின் சங்கீதம், காதை நிரப்பும் வெண்கல நாதப் பொழிவுக்கும், அருவிபோல் அதி வேக காலத்திலும் தெளிவாய்க் கொட்டும் பிர்க்கா வெள்ளத்துக்கும் பெயர் போனது. மார்ச்சு 25உ சென்னையில் நடந்த அவரது முழு நேரக் கச்சேரியில் ஹம்ஸநந்தி, காம்போதி ராகங்கள் விஸ்தாரமாய் வெளி வந்ததோடு, கடைசி பாகங்களில் பிர்க்கா மழை பொழிந்தது. 'ஆடுகிறீர் பாளின்' உருப்படியையும் 'ஸ்ரீராமச்சந்திரா' என்ற சுலோகத்தையும் ராகமாலிகைகளாக உருக்கமாய் வழங்கினார். காம்போதி கிருதியின் ஸ்வர ப்ரஸ்தாரங்களில் பக்க வாத்தியங்கள் கடுகு வெடித்தாற் போல் ஜமாய்த்துவிட்டன.

27உ திருச்சியிலிருந்து நய சாரீரமும் சுக வழியும் கொண்ட ஒரு கானம் கேட்டது. ஸ்ரீரஞ்சனி, கமாஸ் ராகங்களும் உருப்படிகளும் வனப்பா யிருந்தன. பாடியவர் எச். ராமநாதய்யர்.

29உ சென்னையில் எம். ஜி. கௌரி குமாரி வீணைக் கச்சேரி செய்தார். அவரது வாத்தியத்தில் ராக வடிவங்களின் தெளிவும் வனப்பும், உருப்படிகளின் காலப் பிரமாணக் கச்சிதமும் குறிப்பிடத் தக்கவை. அவைகளோடு, அன்று கமகப் பிடிகளின் அழுத்தமும் நாஸூக்கும் சேர்ந்து மனங்கவர்ந்தன. காம்போதி ராகத்திலும், 'எவரிமாட்ட' கிருதியிலும் அத்தகைய அவரது தனிவழி நன்கு சோபித்தது.

30உ காலையிலும் மாலையிலும் பாடிய கல்லிடைக்குறிச்சி எஸ். லக்ஷ்மியின் கானம் சரளமான உருப்படியும் கச்சிதமும் கொண்டு கவனத்தைக் கவர்ந்தது. மாயாமாளவ கௌளை, ஹிந்தோளம், காம்போதி ராகங்கள் சிறப்பா யிலங்கின. ஸ்வரப்ரஸ்தாரங்களின் சாதுர்யம் மெச்சத்தகுந்தது.

அன்று பிற்பகலில் ஒரு மணி நேரக் கச்சேரி செய்த எம். டி. பார்த்தசாரதி, ஞானபலத்திலும், சாதகச் சிறப்பிலும், தனது பாரி சாரீரத்தைக்கூட அடக்கிப் பாடமுடியும் என்பதைக் காட்டிக் கொண்டார். ஹம்ஸத்வனி, கல்யாணி இவையோடு, சுத்த பங்காளா ராகத்தையும் தெளிவும் அழுத்தமும் கொண்டு நிதானமாக வழங்கியது பாராட்டத் தக்கது. கல்யாணியில் விழுந்த சில வக்ரப் பிடிகள் அவ்வளவு பொருத்தமா யில்லை. ஸ்வரப்ரஸ்தாரங்களில் அசாத்ய வேலைப்பாடுகளைக் காட்டினார்.

அதே தேதியில் திருச்சியிலிருந்து கேட்ட என். ஜி. சீதாராமனின் கச்சேரி உயர்ந்த ரகமா யிருந்தது. ஆனந்த பைரவி, நாட்டக் குறிஞ்சி, பல்லவி ராகமாம் காம்போதி இவை எழில் மிகுந்திருந்தன. எல்லாவற்றையும் விட, வயலின், மிருதங்கம், கொன்னக்கோல், டோலக், கடம், கெத்து, கஞ்சிரா ஆக ஏழு பக்க வாத்தியங்கள் சேர்ந்து முழங்கியதே அன்றையக் கச்சேரியில் விசேஷம்.

தி இந்தியன் பாங்க்
லிமிடெட்

★

தலைமை ஆபீஸ் :
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 71,10,900

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 51,67,608

ரிசர்வ் நிதி ரூ. 61,50,000

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

தாமதம் செய்யாதீர்கள்!



பிஸ்மாக் உட்கொள்ளுங்கள்!

உற்சாகக் குறைவாகவும் வாழ்க்கையிலேயே வெறுப்பும் கொண்டவராகவும் இருந்தால் பிஸ்மாக் (பைஸுரேட்டட் மக்னீஷியா) உட்கொள்ளுங்கள். அது வயிற்றில் ஏற்படும் எல்லா சங்கடங்களையும், அஜீரணத்தையும், சோம்பலையும், இன்னும் எல்லா வயிற்றுக் கோளாறுகளையும் நீக்க வல்லது.

உபயோகமற்ற போலிகளை வாங்காதீர்கள்! பிஸ்மாக் உட்கொண்டு நல்ல ஜீரண சக்தி அடையுங்கள்.



மாத்திரையாகவும் பௌடராகவும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள் :
ஜியோப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்
பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர்



கம்பர் தரும் காட்சி

174. ஆளாகப் போகிறீர்கள், பழிக்கு!

"வயசானவர் ஆச்சே, நல்ல புண்ணிய ஆத்மா ஆச்சே, அரக்கரிடையே போய்த் தங்க உமக்கேன் நேர்ந்தது?" என்பதாக ராவணன் சன்னியாசியைப் பார்த்துக் கண்டித்த முறையிலும் பரிதாபமான ஹாஸ்யத்துடனும் சீதை பேசியதைப் பார்த்தோம்.

அரக்கர்கள் பழி பாவத்துக்கு அஞ்சாதவர்கள், தீயவர்கள் என்றெல்லாம் வெளிப்படையாய்ச் சொல்லி விட்டாள் சீதை. தன்னுடைய செல்வம், பராக்கிரமம் எல்லாவற்றையும் துச்சமாய்த்தான் எண்ணுவாள் என்பதையும் தெரிந்து கொண்டான் ராவணன்.

இனி, பேச்சுக்கு இடமில்லை.

ஆண்(டு)ஆ யிடைத்
தீயவன் ஆயிழை யைத்
தீண்டான், அயன்
முன்னுரை சிந்தைசெய் வான்,
தூண்தான் என —
லாம்உயர் தோள்வலி யால்க்
கீண்டான் நிலம்,
யோசனை கீழுற வே!

[ஆண்டு ஆயிடை: அந்தத் தருணத்தில்; தீயவன் ஆயிழையைத் தீண்டான்: ராவணன் சீதையைத் தீண்டவில்லை; (தீண்டான்: தீண்டாதவனாய்): அயன் முன்னுரை சிந்தை செய்வான்: பிரமன் முன்னமேயே கொடுத்த சாபத்தைச் சிந்தனை செய்தான்; அப்படிச் சிந்தனை பண்ணினதால் ஒரு வேலை செய்யத் தொடங்கினான்; தூண் தான் எனலாம் உயர் தோள் வலியால்: பெரிய தூண் என்று சொல்லும்படியான தன் தோள் பலத்தைக் கொண்டு; கீண்டான் நிலம் யோசனை கீழ் உறவே: ஒரு யோசனை தூரம் என்று அதிசயித்துச் சொல்லும்படியாக அவ்வளவு ஆழமாய்க் கீழ நோக்கிப் பூமியைத் தோண்டினான்: — சீதையின் மேனியைத் தொடக் கூடாதல்லவா?]

பூர்வமான இதிகாசத்தின் பாத்திரங்கள், கட்டங்கள், கட்டுக்கோப்புகள் இவைகளுக்கு நெடுநாள்பட்ட உறுதி யொன்று அமைந்திருக்கிறது. அவைகளை, ஏதோ கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறாகப் பிற்காலத்தவர் கையாளும்போது, மாற்றவேண்டி வருகிறது. அதுதான் இதிகாச முறை, காவிய முறை. அதற்காக அசாதாரண சம்பவங்களையும் ஊடே சேர்த்துக் கொள்ளுவது பரம்பரையான வழக்கம்.

கம்பரும், அவர் காலத்து இலக்கிய நாகரிகத்துக்குத் தக்கவாறாக, விஷயத்தைக் கொஞ்சம் மாற்றுகிறார். சீதையை ராவணன் தொடக்கூடாது என்ற ஒரு அம்சத்தை வருவித்துக் கொள்ளுகிறார். அதோடு, அசாதாரண அம்சம் ஒன்றையும் சேர்த்துக் கொள்ளுகிறார். பூமியைத் தோண்டி அந்தத் தரையுடனே தூக்கிக்கொண்டு போகிறான் என்கிற அம்சம்தான் அது.

* * *

சீதையைப் பூமியோடு தூக்கித் தேர்த் தட்டின்மேல் வைத்து விட்டான் ராவணன். தேர்ப்பாகனைப் பார்த்து, "தேரை விடு!" என்றும்

சொல்லி விட்டான். சீதை என்ன செய்வாள்? எப்படித் துடிப்பாள்?

'விடுதேர்' என,
வெங்கனல் வெந்தழி யும்

கொடிபோல்ப் புரள் -
வான், குலை வான், அயர் வான்,

துடியா விழு -
வான், கருள் வான், எழுவான்,

கடிதா அற -
னே இது கா' எனு மால்.

[விடு தேர் என: தேரை விடு என்று ராவணன் சொன்ன மாத்திரத்தில்; வெங் கனல் வெந்து அழியும் கொடிபோல் புரள்வாள்: வெங்கனலிடை வெந்து வதங்கும் பூங்கொடிபோலத் தேர்த் தட்டின்மேல் அப்படியும் இப்படியும் புரள்கிறாள்; குலைவாள்: உறுப்புக்கள் எல்லாம் குலைந்த மாதிரி சோருகிறாள்; அயர்வாள்: உணர்ச்சியற்றுக் கிடக்கிறாள்; துடியா விழுவாள்: உட்கார்ந்திருந்தவள் தேகம் துடிதுடித்து அப்படியே விழுகிறாள்; கருள்வாள்: கைகால்களை மடக்கிச் சுருண்டு கிடக்கிறாள்; எழுவாள்: திடீர் என்று எழுந்து நிற்கிறாள்; கடிது ஆ அறனே இது கா எனுமால்: தர்ம தேவதையே! சீக்கிரமாக வந்து, இந்தச் செயலைத் தடுக்க வேண்டும் என்று அலறுகிறாள்.]

* * *

தேர் போகிற வேகத்தில் காட்டிலுள்ள மலைகளையும் மரங்களையும் பிராணிகளையும் சீதை பார்த்தாள். சோக வெறியில் அலறுகிறாள்.

மலையே, மர -
னே, மயி லே, குயி லே!

கலையே, பிணை -
யே, களி றே, பிடி யே!

நிலையா உயி -
ரேன், நிலை தேறினிர் போய்

உலையா வலி -
யார் உழை நீர் உரை யீர்!'

[மரனே: மரமே; கலையே: ஆண் மானே; பிணையே: பெண் மானே; களிறே பிடியே: ஆண் யானையே, பெண் யானையே; நிலையா உயிரேன் நிலை தேறினிர் போய்: என்னுடைய உயிர் நிலைகுலையப் போகிறது — இந்த என் நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் போய்; உலையா வலியார் உழை நீர் உரையீர்: எது காரணமாகவும் அசையாத வீரம் படைத்த என் நாயகரிடம் போய்ச் சொல்லுங்கள் — உங்களுக்குத்தான் என் நிலை தெரியுமே!]

* * *

"அரக்கர்கள் என்ன, அவுணர்கள் என்ன, எல்லாரும் வந்து தாக்கிய காலத்தில் அவர்கள் ஒருவரும் மிஞ்சாதபடி சரமாரியைத் தொடுத்தீர்களே! இப்போது இங்கே வரக்கூடாதா, ராமனே! லக்ஷ்மணனே! பரதனே! சத்துருக்னனே!"

'நிருதா இயர்
வேர்அற நீள்முகில் போல்

சரதா ரைகள்
வீசினிர் சார்கிலி ரோ!

வரதா! இளை -
யோய், மறு ஏதுமி லாப்

பரதா! இளை -
யோய், பழி பூணுதி ரோ?'

[நிருதாஇயர் வேர் அற: அரக்கர் முதலானவர் குலம் வேர் அற; நீள் முகில் போல்: பெரிய மழை மேகம்போல; சர தாரைகள் வீசினிர்: சரமாரி கொட்டினீர்களே; சார்கிலிரோ: இப்போது ஏன் இங்கு வரவில்லை; வரதா இளையோய்: என் செல்வனே (ராமனே), லக்ஷ்மணனே; மறு ஏதும் இலாப் பரதா இளையோய்: குற்றம் ஏதும் இல்லாத பரதனே, சத்துருக்னனே; பழி பூணுதிரோ: என்னைக் காப்பாற்றா விட்டால், உங்களைப் பெரும் பழி சாருமே!]

தன் நிலைமை தெரிந்தவுடன் அறிவு கலங்கிய நிலைமையில் புலம்புகிறாள். தர்ம தேவதையைக் கண்மூடியவாறு அழைக்கிறாள். கண் திறந்தவுடன் மரம், மான் முதலியவைகளைப் பார்த்துப் புலம்புகிறாள். பிறகு மனம் வெகு தூரம் போய் விடுகிறது. ராம லக்ஷ்மணர்கள் பரத சத்ருக்னர்களைக் கூவி அழைக்கிறாள். — எவ்வளவு இயல்பான முறை வைப்பு!


தலைவர் அவர்களே இந்தச் சங்கத்தின் ஹாலைத் திறந்து வைக்கும்படி சங்கத்தின் சார்பாகவும் உங்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.
?
?
திறக்க முடியாமல் கஷ்டப்படுகிறீரே, நீரும் போய்க் கொஞ்சம் தள்றது தானே?
அவரைத் திறப்பாளராகப் போட்டிருக்கும் பொழுது நாம் எப்படி ஐயா தள்றது? அப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து திறந்து வைத்ததாக அல்லவா ஆகிவிடும்?



காதற் கடிதம்

கி.ரா.கோபாலன்

அப்பொழுதுதான் அறைக்குள் நுழைந்தேன். நுழைந்ததுதான் தாமதம், மேஜை மீதிருந்த கடிதம் என் கண்ணில் பட்டது. அதை எடுத்தேன். உறையின் மேலே பளிச்சென்று எழுதியிருந்தது, 'அன்பு மிக்க காதலருக்கு' என்று!

நான் இவ்வளவு நாட்களாக ஒரு காதற் கடிதத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறேனென்று எந்தப் பெண்மணிக்குத் தெரிந்ததோ?

பாம்புப் பெட்டியைத் திறப்பது போல் நடுங்கும் கைகளுடன் மெதுவாக உறையைக் கிழித்துக் கடிதத்தை வெளியே எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

"அன்பு மிக்க காதலருக்கு. அடியாள் நிலையதாஸி அனந்தகோடி நமஸ்காரம்."

கடிதத்தில் அதற்குமேல் எழுதப்பட்டிருக்கும் வரிகளைப் படிக்கக் கண்ணும் மனமும் சம்மதிக்கவில்லை. அவள் அனந்தகோடி நமஸ்காரம் செய்துகொண்டு எழுதிய அந்த முதல் வரியை நான் குறைந்த பக்ஷம் ஒருநூறு தடவையாவது படிக்காவிட்டால் எவ்வளவு நன்றி கெட்டவனாவேன்!

கடிதத்தில் எழுதியிருந்தவை எல்லாவற்றையும் எழுத எனக்கு இஷ்டமில்லை. நான் அவளைப் பார்க்காதபோது என்னை அவள் பார்த்ததையும், என்னுடைய அழகிய தோற்றத்தில் மயங்கியதையும் எப்படி எப்படியெல்லாமோ வர்ணனை செய்து எழுதியிருந்தாள். என் முகத்தை நான் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் ஒவ்வொரு தருணமும் என் அழகில் எனக்கு ஒரு அளவற்ற திருப்தி ஏற்படும். இந்த அளவற்ற திருப்தியினால் பிறர் என்னை அழகனென்று சொல்லாததற்காக நான் குறைப்பட்டுக் கொண்டது கிடையாது. ஆனால் ஒரு பெண் என் அழகிய தோற்றத்தைப் புகழும் போது நான் என் அதைப் பெருமையாகத் துணிந்து சொல்லக் கூடாது?

கடிதத்தைப் படித்துக் கொண்டே வந்தேன். ரொம்ப களைப்பாக இருந்தது. அப்பொழுதுதான் நான் எத்தனை பக்கங்கள் படித்திருக்கிறேன் என்று பார்க்க ஆசையும் ஏற்பட்டது. ஒன்றும் பிரமாதமில்லை, முக்கால் மணி நேரத்தில் எட்டுப் பக்கங்கள் தான் படித்திருக்கிறேன். இன்னும் படிக்க வேண்டிய பக்கங்கள் எத்தனை என்று பார்த்தேன். எட்டே பக்கங்கள் தான். இன்னும் ஒரு முக்கால் மணி நேரம்— ஆஹா! அந்த எழுத்தின் அழகு—பின்னல் சருக்கம் போடுவதுபோல்—முக்கால் மணி நேரமென்ன, மூன்று மணி நேரம் படித்தாலும் தகும்!

நின்றுகொண்டே கடிதத்தைப் படித்தவன் கொஞ்சம் மன நிம்மதியோடு நாற்காலியில் உட்கார்ந்து பொறுமையுடன் பதட்டமில்லாமல் படிக்க ஆரம்பித்தேன். நான் எவ்வளவு மன நிம்மதியுடனும் ஆர்வத்துடனும் படித்து வந்தேனோ, அந்த நிம்மதியும் ஆர்வமும் கடைசிப் பக்கத்தின் முடிவில் எழுதியிருந்த வார்த்தைகளைக் கவனித்ததும் குலைந்து விட்டன.

"......நான் எத்தனை நாள் இப்படியே உங்கள்மேல் கொண்ட காதலின் நிம்மையைத் தாங்கிக்கொண்டு பொறுத்திருப்பது? ஆகையால் தற்கொலை செய்துகொண்டு உயிரை விடுவதுதான் உசிதமென்று பட்டது. எப்படித் தற்கொலை செய்து கொள்ளலாமென்று யோசித்தேன். கிணற்றில் விழுவது தான் சரியான யுக்தியாகப் பட்டது. கிணற்றில் விழுவது பிரமாதமில்லை. முன்னொரு தடவை நான் தவறிப்போய்க் கிணற்றில் விழுந்து விட்டேன். அப்புறம் எப்படியோ மேலே எறி வந்து விட்டேன். அந்தப் பழக்

கத்தின்மேல் கிணற்றங்கரைக்குப் போனேன். மெதுவாகத் தாம்புக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் ஒவ்வொரு படியாக இறங்கினேன். பதினோராவது படியும் இறங்கியாகிவிட்டது. இன்னும் ஒரே ஒரு படிதான் பாக்கி இருந்தது. அப்பொழுதுதான் உங்களுக்குக் கடிதம் எழுதி வைக்காமல் வந்துவிட்டது ஞாபகத்திற்கு வந்தது. உடனே மெதுவாக மேலே ஏறி இந்தக் கடிதத்தைச் சுருக்கமாக எழுதி உங்கள் அறையில் கொண்டுவந்து வைத்தேன். நான் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனாலும் என் ஆவி உங்களை மறக்காது. உங்களைக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கும்.

இப்படிக்கு,
கிணற்றில் விழக் காத்திருக்கும்
உங்கள் அன்புள்ள காதலி,

நீலாயதாக்ஷி.”

கடிதத்தைப் படித்து முடித்ததும் என் உள்ளம் மத்திடை யகப்பட்ட தயிர் போலவும், உரலிடை யகப்பட்ட அவல் போலவும் படாத பாடு பட்டது. அந்தப் பெண்ணரசியை எப்படியாவது தற்கொலை செய்து கொள்ளாத வண்ணம் தடுக்க வேண்டுமென்று என் மனம் துடித்தது. ஆனால் இந்தக் கடிதத்தை எழுதிய பெண் யார், எங்கிருக்கிறாள் என்று கண்டு பிடிப்பதுதான் மிகவும் சிரமமாக இருக்கும்போல் பட்டது. பதினாறு பக்கம் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தைத் துருவித் துருவிப் பார்த்தேன். அந்த அசட்டுப் பெண், துரதிருஷ்டம் பிடித்தவள், தப்பித் தவறி ஜாடையாகக் கூடத் தான் இன்னவள், இங்கு இருக்கிறேன் என்று தெரிவிக்கவில்லை. நான் இருக்கும் தெருவில் தான் அந்தப் பெண் இருக்க வேண்டும், அதுவும் என்னுடைய வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க்கொண் டிருப்பவளாகத்தானிருக்க வேண்டு மென்று எனக்கு வெகு சுலபமாக விளங்கி விட்டது. ஆனால் நீலாயதாக்ஷி என்ற ரம்மியமான பெயரையே அந்தத் தெரு வட்டாரத்தில் கேள்விப் படாததுதான் குழப்பமா யிருந்தது. அவளைத் தற்கொலையி லிருந்து என்னால் மீட்க முடியா விட்டாலும் அவளை இன்னவ ளென்றாவது தெரிந்து கொண்டால்தான் மனது நிம்மதிப்படும் போலிருந்தது. அதற்கும் ஒரு வழி யில்லாமற் போகவில்லை. தெருவில் எந்தப் பெண் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாளோ, அந்தப் பெண்தான் என்னைக் காதலித்தவள் என்பது தெளிவாக விளங்கிவிடு மல்லவா?


ஆகவே, காத்திருந்தேன். ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் — ஒன்றும் பலனே யில்லை! இவ்வளவு பெண்களிருக்கும் தெருவில் யாராவது ஒருத்தி கிணற்றில் விழுந்து செத்து ‘நான்தான் உன் காதலி!’ என்பதை எனக்குத் தெரிவிக்கக் கூடாதா? ‘யார், யார்?’ என்று கதறிக் கொண்டிருக்கும் என் மனதிற்கு நிம்மதி அளிக்கக் கூடாதா? எவ்வளவு நாள்தான் பொறுப்பது? நானாகவே யாராவது ஒரு பெண்ணை மென்னியைப் பிடித்துக் கிணற்றில் தள்ளிவிட்டு ‘இவள்தான் என் காதலி’ என்று மன நிம்மதி யடைந்தால் கூடத் தேவலைபோலிருந்தது. ஆனால் அதற்கும் துணிவு வேண்டாமா?

எவ்வளவு நாள் இந்தச் சஞ்சலத்தை மனதில் வைத்துக் கொண்டு உருகுவது? மெதுவாக ரங்குவிடம் சொல்லிப் பரிகாரம் கேட்டேன். துப்பறியும் விஷயத்தில் அவன் நிபுணன் என்று சொல்லிக் கொள்வதினால்தான் அவனை நெருங்கினேன். அவன் மேற்படி கடிதத்தை இருபது தடவை திருப்பித் திருப்பிப் படித்து விட்டு, “ஒரே ஒரு உளவுதா னிருக்கிறது. அதாவது, அவள் முதலில் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த பொழுது அவள் இறங்கிய கிணற்றில் பன்னிரண்டுபடிகள் இருந்ததாக அவள் கடிதத்தி லிருந்தே நன்கு தெரிகிறது. ஆகையால் நீ தெருவில் ஒவ்வொரு வீட்டுக் கிணற்றையும் பார்த்துப் படிகளை எண்ணிக் கொள். எந்த வீட்டுக் கிணற்றில் பன்னிரண்டு படிகள் இருக்கின்றனவோ அந்த வீட்டில் ஒரு பெண்ணிருந்தால் அவள் தான் உன்னைக் காதலித்தவள் என்று நிச்சயம் செய்து கொள்” என்றான்.


ரங்கனின் யுக்தியும் யோசனையும் எனக்கு நல்லதாகவே பட்டது. தெருவில் ஒவ்வொரு வீடாக ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கிணற்றுப் படிகளை எண்ணிக் கொண்டு வருவதற்குப் பத்துப் பன்னிரண்டு நாட்கள் சிரமப்பட்டேன். இருபது வீடுகளில் மூன்று வீட்டுக் கிணறுகளில் தான் பன்னிரண்டு படிகள் இருந்தன. ஆனால் என்னுடைய துரதிருஷ்டம் அந்த மூன்று வீடுகளில் ஒரு வீட்டில்கூடப் பெண் என்ற வாசனை வீசுவதாகக்கூட எனக்குத் தெரியவில்லை!

இன்னும் பல நாள் சொல்ல முடியாத மனவேதனையை அநுபவித்த பிறகு கடைசியில் இந்த முடிவுக்கு வந்தேன்:— அக் கடிதம் எழுதிய பெண் யாரா யிருந்தால் என்ன? எனக்கும் பதினாறு பக்கத்தில் ஒரு காதல் கடிதம் வந்தது என்ற பெருமை இருக்கிறதல்லவா? அதுவே போதும்!

"என்னை மன்னிக்கவும்!"



"ஆரோக்கியத்திற்கு உட்புற சுத்தமே முதலாவது!"



ஆண்ட்ருஸ் அருந்தி உட்புறத்தை சுத்தி செய்வது ஆரோக்கியத்திற்கான முதல் விதி என்பதை ஜனங்கள் இப்போது அதிகமாக தெரிந்துகொண்டு வருகிறார்கள். வெளிச் சுத்தத்தைப்போல், உட்புற சுத்தமும் உடலுக்குத் தேவையானது என்பதும் இயற்கையிலே ஏற்பட்டது. ஆண்ட்ருஸ் அருந்தி உடலின் உட்புற சுத்தம் செய்வது பரிபூரண திருப்தி அளிக்க வல்லது. ஒரு டம்ளர் பொங்கும் ஆண்ட்ருஸ், ஒரு இன்பமயமாத மலமிளக்கியாக இருப்பதோடு மட்டுமில்லாமல் உடலின் உட்புறமனைத்தும் கச்சிதமாக சுத்தம் செய்துவிடுகிறது. மலச் சிக்கல், வயிற்று உப்புசம் முதலியவை போன்ற தினசரி அவதிகளுக்குக் காரணமான வயிற்றிலுள்ள விஷ பண்டங்களை அப்புறவாக அப்புறப்படுத்துகிறது. ஆண்ட்ருஸை அன்றாடம் அருந்தி இனிது இன்புறுங்கள்—குளிர்ச்சி தந்து களைப்பாற்றி, வீர்யமளிப்பதை அப்போது காணுங்கள்—மானுஷ்யத்தின் அபார சக்தியை அளிக்கிறது. மெதுவாகவும் கச்சிதமாகவும் உடலை உறுதிப்படுத்தும். ஆண்ட்ருஸின் வேலைகளைக் கவனியுங்கள் :

முதலில் : ஆண்ட்ருஸ் வாயையும் நாக்கையும் சுத்தப்படுத்தி கச்சிதமாக்குகிறது.

அடுத்தபடி : ஆண்ட்ருஸ் வயிற்றை சரிப்படுத்தி புளிப்பு நீரை நிறுத்துகிறது.

பிறகு : ஆண்ட்ருஸ் ஈரலை செம்மையாக்கி உப்புசத்தைப் போக்குகிறது.

கடைசியாக : உட்புற சுத்தத்தை செய்து முடிக்க, ஆண்ட்ருஸ் மெதுவாக வயிற்றை சுத்திகரிக்கிறது. அது அசுத்தப்படுத்தும் விஷங்களை அப்புறப்படுத்தி மலச் சிக்கலைப் போக்கி ரத்தத்தை குளப்படுத்தி குளிர்ச்சியாக்குகிறது.

"டின்களிலும் கார்டன்களிலும் பாக் செய்யப்பட்டு எங்கும் புது ஸ்டாக்குகள் இருக்கின்றன."

ANDREWS

ஆண்ட்ருஸ் லிவர் ஸால்ட்

108

குளிர்ச்சியூட்டுகிறது - களைப்பாற்றுகிறது - ஊக்கமூட்டுகிறது

உதவிக் கண்காட்சி

ஸோமாஸ்

"எங்கே இப்படி, வெளியிலே புறப்படுகிறீர்களாக்கும்!" என்று கூறிக் கொண்டே என் நண்பர் என் முன் காட்சியளித்தார். நான் சட்டை போட்டுக் கொண்டு கிளம்புவதைப் பார்த்துவிட்டுத் தான் என் நண்பர் அந்த அர்த்தமற்ற கேள்வியைப் போட்டார்.

"ஆமாம், இப்படிப் போய்த் தேனாம் பேட்டை காங்கிரஸ் மைதானத்திலே நடக்கும் கண் காட்சியைப் பார்த்துவிட்டு வரலாம் என்று உத்தேசம்!" என்றேன்.

அவ்வளவுதான்; என் நண்பர் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

"என்ன அதிசயத்தைக் கண்டு விட்டு இப்படிச் சிரிக்கிறீர்கள்? எனக்கும் அதைச் சொல்லிவிட்டுச் சிரியுங்கள். நானும் சிரிக்கிறேன்!" என்றேன்.

உடனே நண்பர் சிரிப்பைச் சிரமப் பட்டு அடக்கிக் கொண்டு, "ஒரு அதிசயமும் இல்லை, ஸார்! 'கண் காட்சி' பார்க்கப் போகிறேன் என்றீர்களே, அதுதான் எனக்குச் சிரிப்பு தாங்கவில்லை! நீங்கள் சென்னையிலேயே இத்தனை வருஷ காலம் இருந்துகூட மூர் மார்க்கெட் பார்த்தது கிடையாதோ?" என்று ஒரு கேள்வி கேட்டு நிறுத்தினார்.

"மூர் மார்க்கெட் பார்க்காமல் என்ன? பேஷாய்ப் பார்த்திருக்கிறேன்! எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றேன்.

"மூர்மார்க்கெட்டைப் பார்த்து விட்டால் கண்காட்சியைப் பார்க்க வேண்டிய அவசியமே யில்லை. எக்ஸிபிஷனாவது ஒன்றாவது! வெறும் சில்லறைக் கடைத் தெரு! அதைத்தான் தடபுடலாக விளம்பரப் படுத்தி நம்மை யெல்லாம் முட்டாள்களாக்குகிறார்கள்!" என்றார்.

"நீங்கள் பழைய கண் காட்சிகளைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்! இப்போது நடக்கும் கண்காட்சி நீங்கள் நினைப்பது போல் அல்ல. காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பொருட் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறதாம். ரொம்ப உபயோகமானதாம். வேணுமானால் நீங்களுந்தான் வந்து பாருங்களேன்!" என்றேன் நான்.

வெய்யில் தகித்துக் கொண்டிருந்ததையும் கவனியாமல் இருவரும் கிளம்பினோம்.

கண்காட்சி நடக்கும் இடத்தை அடைந்து டிக்கட்டை வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தது தான் தாமதம். அங்கே நான் கண்ட காட்சி பரவசத்தையே அளித்து விட்டது. என்னையும் அறியாமல் பயபக்தியும் மரியாதையும் எங்கிருந்தோ வந்து என் இருதயத்தில் குடிகொண்டன. சற்றுநேரம் ஒன்றும் தோன்றாமல் நின்று விட்டேன்.

திரும்பிப் பக்கத்திலிருந்த நண்பரைப் பார்த்ததும் என் பக்தியுணர்ச்சியுடன் அதிசய உணர்ச்சியும் கலந்துகொண்டது. வருகிற வழியெல்லாம் பொருட்காட்சியைப் பலவிதமாகத் தாக்கிப் பேசிக்கொண்டு வந்த என் நண்பர் கண்களில் நீர் ததும்பப் பேச நா எழாமல் அப்படியே நின்றார்.

அந்தப் பொருட்காட்சிச் சாலையின் வாசலில் சாந்த சொரூபத்துடன் காந்திமகான் எங்களை வரவேற்றால் எங்களுக்குப் புளகாங்கிதமும் பக்தி பரவசமும் உண்டானதில் அதிசயம் என்ன இருக்கிறது?

ஆம்; சித்திரத்தில் விளங்கிய காந்திஜி தான் எங்களை அன்புடன் வரவேற்றார்.

"என்ன? உள்ளே போகலாமா, வேண்டாமா? உங்கள் மனசுக்குக் கஷ்டமாயிருந்தால்......!" என்றேன்.

"நன்றாய்க் கேட்டீர்கள், போக வேண்டாமா என்று? உம், நடவுங்கள்!" என்று சொல்லி விட்டுப் பரபரப்புடன் என் கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக் கொண்டு உள்ளே போனார் என் நண்பர். நானும் அவரைத் தொடர்ந்து உள்ளே போனேன்.

முதலில், கதர்த் திட்ட விடுதிக்குப் போனோம். பஞ்சு கொட்டுவதி லிருந்து ஆடையாக நெய்கிற வரையில் அங்கே படிப்படியாகச் செய்து காட்டப்பட்டது.

"ஆகா, என்ன புனிதமான தொழில்! நிற்க நிழல், உடுக்க உடை, வசிக்க வீடு—



இந்திய மாதர் படை முகாமில் பெண்மணிகள் வருகிறவர்களை முகமன் கூறி வரவேற்றுப் பேசுகின்றனர்.

இவைதானே மானிட வாழ்க்கையின் இன்றியமையாத தேவை! மானங்காக்கும் ஆடை இவை யெல்லாவற்றையும் விட முக்கிய மல்லவா? நிர்மாண திட்டங்களுள் மிக முக்கியமானதாகிய கதர்த் திட்டத்தைச் சரிவர நிறைவேற்றாததனால்தானே 'நபருக்கு ஐந்து கஜம்' என்னும் 'நிர்வாண திட்டம்' நம் நாட்டைப் பீடித்தது?" என்று கூறும்போது என் நண்பரின் குரலில் உருக்கமும் ஆத்திரமும் கலந்திருந்தன. கதரே கட்டி யறியாதவரும் மில் துணியையே உடுப்பவருமான என் நண்பரா இப்படி ஆவேசத்துடன் பேசுகிறார்? எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது.

"ஸார், உங்கள் உடம்புக்கு ஏதாவது......!" என்றேன்.

அதற்குள் என் நண்பர் இடைமறித்து, "உடம்புக்கு ஒன்றுமில்லை. இப்பொழுதே பெட்டி ராட்டினமும் பஞ்சும் வாங்கிவிட வேண்டியதுதான்!" என்று கூறிவிட்டு ராட்டினத்தையும் பஞ்சையும் வாங்கினார். என் நண்பரின் மனம் மாறினதற்குக் காரணம், அங்கே தொண்டர்கள் கதர் சேவைச் செய்து காட்டிய திறன்தான்.

காவியங்களிலும், கவிதைகளிலும், சிறு கதைகளிலும் உன்னத ஸ்தானம் பெற்றிருக்கும் வளையல்கள் இந்தப் பொருட் காட்சியிலும் உயர்ந்த இடம் பெற்றிருந்தன. ஆம்; நவராத்திரி கொலு வைப்பது போல் படி கட்டி, அதில் வரிசை வரிசையாக வளையல்களை அடுக்கி யிருந்தார்கள். வான வில்லின் வர்ண விசித்திரங்களை வீசிக் கொண்டு விதவிதமான நிறங்களில் நூதன மோஸ்தரில் வளையல்கள் இருந்தன. வளையல் செய்யும் விதமும் அங்கே காட்டப்பட்டது. பெண்களும் ஆண்களும் அங்கேதான் வளைய வந்து கொண்டிருந்தனர். அதாவது பெண்கள் வளையல் கடையைச் சுற்றியும், அவர்களை அழைத்து வந்த ஆண்கள் அந்தப் பெண்களைச் சுற்றியும் வளைய வந்தார்கள்.

அங்கிருந்து 'இந்திய மாதர் சேவைப் படை'க்குச் சென்றோம். இந்தப் பொருட் காட்சியிலேயே இந்தப் பகுதிதான் முக்கியமானதென்று கூறவேண்டும்.

வீட்டைப் பரிபாலிக்கும் முறை, சமையற் பயிற்சி, கைத் தொழில் முறை, தையல் வேலை, நூல் நூற்றல், ஆரம்பக் கல்வி, பொழுது போக்குக்கு உரிய கல்வி, முதியோர் கல்வி, முதல் உதவி, வீட்டில் செய்யக் கூடிய சாதாரண சிகிச்சைகள், மருத்துவப் பயிற்சி, தோட்ட வேலை இவற்றை யெல்லாம் அங்கிருந்த பெண் மணிகள் சுவாரஸ்யமாகச் சொல்லிக் காட்டியது மல்லாமல் அழகாகச் செய்தும் காட்டினர். அது மிகவும் சுவாரஸ்யமா யிருந்தது.

பெண்மணிகள் தெரிந்து கொள்ள வேண்டியவை இவ்வளவு இருக்கின்றனவா என்று நானும் என் நண்பரும் அதிசயத்தினால் வாயைப் பிளந்தோம்.

சித்திர விசித்திரங்களுடன் நூலில் பூ வேலைகள் (எம்பிராய்டரி) அபரிமிதமாகச் செய்து பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்திய மாதர் படைக் காரியதரிசியை அணுகி, "இந்தப் பயிற்சி முகாமில் சேர்ந்து பயிலுவதற்கு ஒருவர் என்ன சம்பளம் கட்ட வேண்டும்?" என்று கேட்டேன்.

"சம்பளமா? அதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை. இலவசமாகவே இந்த வேலைகளைக் கற்றுத் தருகிறோம். நகரம்முழுவதும் எங்கள் முகாம்கள் இருக்கின்றன.

அங்கு வந்து ஓய்வு நேரங்களில் கற்றுக் கொள்ளலாம்!" என்றார் காரியதரிசி.

'அன்னம் ஊட்டிடும் தெய்வ மணிக் கையின்' அற்புதமான வேலைகளை யெல்லாம் பார்த்து ரசித்துவிட்டு ஆதாரக் கல்வி முகாமுக்குப் போனோம்.

காந்தி மகானின் நிர்மாணத் திட்டத்தின் ஆதாரமல்லவா ஆதாரக் கல்வி?

"குழந்தைக்கு உபயோகமான ஒரு தொழிலின் மூலமே கல்வி கற்றுக் கொடுக்க நான் ஆரம்பிப்பேன். கல்வி ஆரம்பிக்கும் நிமிஷம் முதற்கொண்டே ஆக்கல் வல்லமை குழந்தைக்கு உண்டாகச் செய்வேன்"

என்னும் ஆதாரக் கல்வியைப் பற்றிய மகாத்மாவின் மணிவாசகம் என் நினைவுக்கு வந்தது.

முகாமின் நாலுதிசையிலும் நாரீமணிகள் நின்று கொண்டு ஆதாரக் கல்வி திட்டத்தைப் பல ஆதாரங்களுடன் விளக்கினர். அதற்கு வேண்டிய சித்திரங்கள் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. ஆனால் அந்தச் சித்திரங்கள் இன்னும் கொஞ்சம் அழகாயும் வசீகரமாயும் இருந்தால் ஆதாரக் கல்வி இயக்கத்துக்கு நல்ல பிரசாரமா யிருக்கும் என்று தோன்றியது.

"தனக்குப் பிடித்தமான தொழிலின் மூலமே கல்வி கற்றுக் கொள்ளுவதனால் ஆதாரக் கல்வி முகாமில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவன் உற்சாகமா யிருக்கிறான், பாருங்கள்!" என்று ஒரு பெண்மணி சுவரில் மாட்டி யிருந்த சித்திரத்தைச் சுட்டிக் காட்டி விளக்கம் கூறினாள். உண்மையில், சித்திரத்தி லிருந்த மாணவன் முகம் அவ்வளவு உற்சாகமா யில்லை. எனினும் நான் "சரிதான்" என்று தலையை ஆட்டி வைத்தேன்.

"சாதாரணப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் மாணவன் பரீக்ஷைப் பேய்க்கு அடிமையாகி இராத் தூக்கமில்லாமல் சதாகாலமும் படிப்பைக் கட்டிக் கொண்டு போராடுகிறான். அவன் முகத்தில் உற்சாகமே இல்லாம லிருக்கிறான், பாருங்கள்!" என்று இன்னொரு பக்கத்தி லிருந்த சித்திரத்துக்கு இன்னொரு பெண்மணி விளக்கம் கூறியது சித்திரத்தின் முக பாவத்துக்குப் பொருத்தமா யிருந்தது.

இதை யெல்லாம் கேட்டதும் என் கண்ணில் நீர் துளித்தது. வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் உபயோக மற்ற கல்வியைத் திணிக்கும் நம் பள்ளிக்கூடங்களை நினைத்துத்தான் என் கண்களில் நீர் மல்கின.

"இத்தனை நாள் வரையில் நான் இந்த ஆதாரக் கல்வித் திட்டத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தது கூடக் கிடையாது. மாணவர்களுக்குச் சுவாரஸ்யம் உண்டாகும் வகையில் போதிக்கக் கூடிய கல்வியும் இருக்கிறது என்பது எனக்கு இப்பொழுது தான் தெரியும்!" என்று உணர்ச்சி மிகுதியில் சொல்லிவிட்டு என் நண்பர் மேலே பேச முடியாமல் தவித்தார்.

பிறகு பனைவெல்லம் காய்ச்சும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

"உங்கள் பல் அவ்வளவும் விரைவில் கழன்றுவிட வேண்டு மென்று விரும்புகிறீர்களா? அப்படியானால் அஸ்கா சர்க்கரையையே உபயோகியுங்கள்!"

மேற்படி விளம்பரத்தைப் படித்ததும் அஸ்கா இல்லா விட்டால் காப்பி அஸ்தமித்து விடும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு எப்படி யிருக்கும் என்கிறீர்கள்? பனைவெல்லத்தி லிருந்து செய்யப்படும் வெள்ளைச் சர்க்கரை தித்திக்கும்



மரத்தினால் செய்த யந்திரத்திலிருந்து நெல் வேறு, அரிசி வேறாக முனை முறியாமல் பிரிக்கப்படும் காட்சி.

என்று என்னால் நம்பவே முடியவில்லை. வாயில் போட்டுப் பார்த்த பிறகுதான் நம்பிக்கை பிறந்தது.

அங்கிருந்து நண்பரும் நானும் இயற்கை சிகிச்சாலயத்துக்குப் போனோம். ஈர மண்பத்து, தொட்டி ஸ்நானம், ஆவி ஸ்நானம், ஒளியில் ஸ்நானம், மாலிஷ், மர்த்தனம் முதலிய இயற்கை வைத்திய முறைகளுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் அங்கே யிருந்தன. மர்த்தனமும் மாலிஷும் இலவசமாகச் செய்து வைப்பதற்கு டாக்டர் பார்த்தசாரதி தயாராய்க் காத்துக் கொண்டிருந்தார்.

அவரிடமிருந்து தப்பிக் கால்நடைச்சாலை, வேலூர் மண் வேலைகள், சுகாதார முறைகளைக் காட்டும் சாலைகள் இவைகளை யெல்லாம் பார்வை யிட்டுக் கொண்டே உணவு இலாகாவுக்கு வந்தோம். நெல் அரைக்கும் மர யந்திரத்தில் மாதர்கள் நெல் அரைத்துக் கொண்டிருந்தனர். அநாயாசமாக அந்த யந்திரத்திலிருந்து நெல் வேறு அரிசி வேறாக முனை முறியாமல் பிரிக்கப்படும் காட்சி பார்க்க மிகவும் ஆனந்தமா யிருந்தது.

“வைட்டமின் சத்து வீணாகாமல் இவ்வளவு சுலபமான முறையில் நெல்லை அரிசியாக்க முடியும் என்று எனக்குத் தெரியவே தெரியாதே!” என்று கூறி என் நண்பர் ஆச்சரியப்பட்டு நின்றுவிட்டார்.

உணவுச் சாமான்களை வீணாக்காமல் சமைக்கும் முறை அங்கிருக்கும் பெண்மணிகளால் செய்து காட்டப்பட்டது.

உணவுச் சாலையிலிருந்து பால் பண்ணைக்குச் சென்றோம்.

“பால் 1 பங்கும் 2 பங்கு ஜலமும் சேர்த்து நல்ல மண் பாத்திரத்தில் ஒரு கொதி வரக் காய்ச்சு”—என்ற அறிக்கையைக் கண்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது.

சென்னை நகரத்துப் பால்காரர்களுக்கு இந்த வியாபார தந்திரத்தைச் சொல்லித் தர வேண்டுமா? ஒரு வேளை இந்த அறிக்கையும் பால்காரரின் தந்திரந்தானோ என்னவோ என்ற சந்தேகமும் தோன்றியது.

* * *

காட்சிச்சாலை மைதானத்தைச் சுற்றி வந்த அலுப்பும் களைப்பும் தீரப் பல கதம்ப நிகழ்ச்சிகள் ஏற்படுத்தி யிருந்தார்கள்.

கதம்ப நிகழ்ச்சிகளுள் பொய்க் கால் குதிரையை முக்கியமாய்ச் சொல்ல வேண்டும். ஆணும் பெண்ணுமாகப் பொய்க் கால் குதிரையில் ஏறி நவரஸமும் தாளமும் முக பாவத்துடன் நர்த்தனம் செய்யும் காட்சி வெகு அற்புதம்.




‘மகன் சர்க்கா’வில் ஆதாரக் கல்வி முகாமைச் சேர்ந்த ஒரு பெண்மணி நூல் நூற்கும் காட்சி.

நடனம், சங்கீதம் முதலிய லலித கலைகளுக்கு உறைவிடமாக விளங்கும் தஞ்சை ஜில்லாவின் புராதனக் கலைகளுள் ஒன்று பொய்க்கால் குதிரை. காலம் எவ்வளவோ தூரம் முன்னேறி நூதன முறைக் கலைகள் எத்தனையோ வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் பொய்க் கால் குதிரை மட்டும் என்றும் சிரஞ்சீவியாய் விளங்குகிறது. அக்கலையில் சிறந்த பயிற்சி பெற்ற பெங்களூர் சுந்தரமூர்த்தியும் அவருடைய மனைவியும் பொய்க்கால் குதிரை நடனம் இன்னும் பொய்த்துப் போகவில்லை என்பதை நிரூபித்துக் காட்டினர்.

மணி எட்டரை ஆகிவிடவே எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பினர். நானும் என் நண்பனை யழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நகர்ந்தேன்.

"என்ன ஸார்! 'எக்ஸிபிஷனில் என்ன இருக்கிறது?' என்று என்னைப் பரிகாசம் செய்தீர்களே, இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?" என்று நண்பர் வாயைக் கிண்டினேன்.

"என் தோல்வியைப் பரிபூரணமாக ஒப்புக்கொள்கிறேன். இந்தமாதிரி தொழில் அபிவிருத்தி முறைகளை எல்லாப் பொருட் காட்சியிலும் காட்டினால் எவ்வளவு உபயோகமாயிருக்கும்? நாம் பார்த்த வரையில் ஒரு 'ஐயிட்டம்' கூட வீண் என்று சொல்ல முடியாது. நாளைக்குக் குடும்ப சமேதனாக மறுபடியும் பார்க்க வேணும் என்று நிர்மானித்து விட்டேன்!" என்று என் நண்பர் உற்சாகத்துடன் சொன்னார்.



தாவள்யமான வெள்ளை மண் அற்புதமான பாத்திரங்களாக உருவெடுக்கிறது.

"அப்படியே செய்யுங்கள். இந்தக் கண்காட்சிக்கு வந்து பார்ப்பதினால் நாம் பயன் அடைவதோடு, இதற்குக் கொடுக்கும் பணமும் காந்தி மகானால் அஸ்திவாரமிடப்பட்ட ஹரிஜன வித்யாலயத்துக்குப் போய்ச் சேருகிறது. புனிதமான கைங்கரியம்; புனிதமான காட்சி!" என்றேன்.

இந்த ஹரிஜன உதவிப் பொருட்காட்சிதான் உண்மையிலேயே உபயோகமான பொருட் காட்சி என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். மற்ற எக்ஸிபிஷன்களையெல்லாம் பொருட் காட்சி என்று சொல்லுவதில் கொஞ்சங்கூடப் பொருளே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

காலக்ஷேபம்

நல்ல சௌகரியம்

சினிமா டைரக்டர் (கதாசிரியரைப் பார்த்து):—கதாநாயகன் விஷம் சாப்பிட்டு இறந்து போவதாக எழுதியிருக்கிறீரே, அதை மாற்றிக் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இறப்பதாக எழுதி விடும்.

கதாசிரியர்:—ஏன், விஷம் சாப்பிட்டான் என்றால் என்ன தவறு?

சினிமா டைரக்டர்:—சினிமா பார்க்க வந்தவர்கள் சினிமா முடிந்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டு தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதற்குச் சௌகரியமாயிருக்கும்.

★

நம்ப வேண்டாம்!

நீதிபதி (வக்கீலைப் பார்த்து):—அவன்தான் குற்றவாளியென்று ஒப்புக் கொள்ளுகிறானே, நீர் ஏன் 'அவன் குற்றவாளியில்லை' என்று வாதாடுகிறீர்?

வக்கீல்:—அவன் சொல்லுவதை நம்பக் கூடாது. அவன் சுத்தக் 'கேடி' யாயிற்றே!

நல்ல உபாயம்

கான்ஸ்டபிள்:—வீட்டிலே பெட்டிச் சாவி காணாமற் போயிடுத்து என்று அம்மா போனில் சொன்னாங்க! பெட்டியைத் திறப்பதற்கு என்ன செய்யறதுங்க?

இன்ஸ்பெக்டர்:—யோசனை என்ன, உடனே 80-ம் நம்பர் கைதியை அழைத்துப் போய்ப் பெட்டியைத் திறக்கச் சொல்லு!


★

சில்லறை விஷயம்

ஒரு மளிகைக் கடையின் எதிரே ஏகக் கூட்டமாயிருந்தது. ஓர் ஆசாமி அங்கே நின்று கொண்டு கடைக்காரரை நச்சரித்துக் கொண்டிருந்தார்.

கடைக்காரன்:—ஐயா, சும்மா நச்சரிக்காதீர்கள்! என்ன வேண்டும்? ஏதாவது சில்லறை விஷயமாயிருந்தால் சொல்லுங்கள்!


அவர்:—சில்லறை விஷயம்தான். பத்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை வேண்டும்!



சிறுவர்களுக்கு — எதிர்கட்சியின் "கோலை" நோக்கி ஓடுகிறீர்கள்! நம் "சென்டர்" தயாராயிருக்கிறான். டக் — அவன் உன்னிடம் பந்தைத் தட்டிக்கொடுத்து விட்டானே. பந்தை சரிப்படுத்திக்கொள். உன்பலமான அடியால்தான் நேரே கோலுக்குள் போகவேண்டும் - அடி! இது ரொம்ப கடினமான வேலைதான். நீ பல தடவைகள் கீழே விழுந்ததால் மிகவும் அழுக்குப் படிந்திருக்கிறாய். ஆனால் ஆட்டம் என்னமோ சேர்த்தியாய் இருந்தது. இப்பொழுது நீ லைப்பாய் சோப உபயோகித்து ஸ்நானம் செய்யவேண்டும். லைப்பாய் அழுக்கையும் கிருமிகளையும் அகற்றுவதால், அதனால் ஸ்நானம் செய்வது மிகவும் அவசியம். இது உன் தாயாருக்கு மிகவும் ஆறுதலளிக்கும். ஆகையால், ஒவ்வொரு ஆட்டத்திற்கும் பிறகு லைபாயால் சுத்தம் செய்ய மறக்காதே. சாப்பாட்டிற்கு முன்னும் கூடத்தான்.

"நான் ஏன் லைபபாய் சோப்பை உபயோகிக்கிறேன்?" என்ற கேள்விக்கு உங்களுக்குத் தோன்றும் பதிலை Dept. C212 P. O. Box 758, Bombay. என்ற விலாசத்திற்கு எழுதுங்கள். உன்னத விடைக்கு மாதமொரு முறை ஒரு பரிசு அளிக்கப்படும்.


பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் வீட்டிலோ, பள்ளிக்கூடங்களிலோ, தெருக்களிலோ, எங்கு விளையாடினாலும், விஷக்கிருமிகள் கொண்ட அழுக்கின் அபாயத்திற்குள்ளாவார்கள் என்று உங்களுக்குத் தெரியும். குறைந்தது 27 வித நோய்களுக்கு அழுக்கும் தூசியும்தான் காரணமென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அழுக்கிலுள்ள கிருமிகளை ஒழிக்க மிகவும் சுலபமானதும், சுகமான வழி என்னவென்றால் லைப்பாயினால் நன்றாயும், ஒழுங்காயும், சுத்தம் செய்வதுதான்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L. 86-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



ALKI ஏப்ரல் 13, 1947 4 அண

REGD. No. M. 4392

